www.tamilarangam.net

# பூவரசு

**POOVARASU.**

TAMILISCHE KULTUR MAGAZIN




புரட்டாதி-ஐப்பசி 1992.

உள்ளே:
சிறுகதை, கவிதை, கட்டுரைப்
போட்டிகள் பற்றிய விபரங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வேலவனுக்கு ஒரு விண்ணப்பம்!

வேலெடுத்து சூரர்படை
வேரறுத்த வேலவா!
நாடுகாக்கப் போர்தொடுத்த
நமது சுற்றம் காக்கவா!

காடலைந்து வள்ளிதன்னைக்
கரம்பிடித்த வேலவா!
நாடலைந்தும் உன்னில் நாங்கள்
கொண்ட காதல் காணவா!

நீ படைத்த மண்ணில் என்றும்
நிறைந்திருக்கும் வேலவா!
போர்முடித்து சுதந்திரத்தை
போற்றுகின்ற வாழ்வுதா!

இந்துமகேஷ்.

www.tamilarangam.net

# பூவரசு

*POOVARASU.*
TAMILISCHE KULTUR MAGAZIN

**இனிய தமிழ் ஏடு**
**இரு திங்கள் ஒன்று**

புரட்டாதி-ஐப்பசி 1992.


இதழ்:11

**படைப்பவர் ஆக்கம் தருக**
**படிப்பவர் ஊக்கம் தருக.**

முகவரி:

Poovarasu
Sinniah Maheswaran
Neuwieder Str.32
2800 Bremen 41
Germany.

உலகமே நம் இல்லம் உள்ளமெல்லாம் நம் சொந்தம்.



*இனிய தமிழ் ஏடு.*

*பூவரசு வாழ்க- தமிழ்*
*பூக்கின்று!*

நாட்டுக்கோ வீட்டுக்கோ
நல்லதுக்கோ—அறிஞர்போன்று
ஏட்டுக்கும் எழுத்துக்கும்
எழுதுவோர்க்கும்—உரிமையாலே
பாட்டுக்கும் பயனுக்கும்
பாடுவோர்க்கும்—சுயநலத்தால்
பாவனையால் நலந்தேடி
எழுதுவோரை முகங்கிழித்து
நாடறிய நாமறிய
எழுதும்தாளே—நல்லேடாகும்
நமக்கின்று தேவையதை
நல்கிநிற்கும் —இனிய தமிழ்
பூவரசு வாழ்க! தமிழ்
பூக்கின்று!

சி. கமலநாதன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகரின் பார்வையில் பூவரசு.....

அன்புடன் பூவரசு ஆசிரியர்க்கு!
தங்களின் ஆவணிப் பூவரசைக்கண்ணுற்றேன்.
இந்துமகேஸை நான் 15-20 வருடங்களுக்குமுன்பே அவரது நாவல்களின்மூலம் அறிவேன்.அன்றைய சிறந்த நாவலாசிரியர்களைவிட அவர் வரவேற்பைப்பெற்றார்.காரணம் நியூவேவ் பாலியல் உணர்வுச்செறிவுள்ள கதைக்கு-நாகரீகமாகச் சூட்டப்பட்ட 'நியூவேவ்' குறி அன்று புதியது. மக்களின் உள்ளுணர்வுகளில் கிளுகிளுப்பை ஊட்டியது.
வரவேற்புக்கிடைத்தது.
ஆனால், அன்றைய சமூகம் அமைதிக்காலவோட்டத்தில் இருந்தது.
இன்று போரும் சுதந்திரவேட்கையும் நிறைந்த பரபரப்பான நிலையிலும், பசி,பட்டினி,நோய் இவற்றுடன் தியாக உணர்வுடன் சமூகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.
இன்று நியூவேவ் தேவையுமில்லை.இன்றது புதுமையுமல்ல.
நம்மவர்கள் அதில் நன்றாக ஊறிப்போயிருப்பார்கள் என எண்ணுகிறேன்.
இன்றைய தேவை விடுதலைக்கு,சமூகத்தின் அமைப்பு மாற்றத்துக்கு ஏற்றதாக எழுதுவதே.
பெண்கள் சுதந்திரம்பற்றி வாய்கிழிய கத்துகிற இன்று-
காதற்கனிச்சுவைகளையும் கட்டழகுகளையும் வர்ணித்துக்கொண்டிருப்பது பெண்ணடிமைப் பண்பை ஆதரிக்கிறமாதிரி தோற்றம் கொடுக்கும்.
ஆயினும் பூவரசு நாட்டுத்தேவைகளையும் அரவணைத்துச்செல்வதைக் காணமுடிகிறது.
இன்னும் முன்னேறவேண்டும்.
சலிப்பு ஏற்படாமல் வாசிக்கமுடிந்தது.
ஜெகதீஸ்வரியின் படைப்புக்களும் கருத்தோட்டமும் மிகநன்று.
வரதராஜாவின் பயணக்கட்டுரை மிகநன்று.மணியனுக்கோ,
சிவப்பிரகாசத்திற்கோ சற்றும் மாற்றுக்குறைந்ததல்ல.எனினும்-
ஜேர்மனியில் தஞ்சம்கோரி வாழுகின்ற எமது பரிதாப வாழ்வை பணத்தால் மறந்த தன்மை கட்டுரையில் காணப்பட்டது.
அது ஒரு தனிமனிதனிடம் காணப்பட்டால் பாவாயில்லை.ஆயிரம்பேருக்கு எழுதுகிற எழுத்தாளனிடம் இருக்கக்கூடாது.
நான் பெரிதும் கற்றவனல்ல.
ஏதோ புரிந்துகொண்டதை எழுதினேன்.

— சி.கமலநாதன்
பிஸ்லெஸன்டோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்கள் இளந்தளிர்கள்.

அன்பான தம்பி தங்கைகளே!

எங்கள் பூவரசு இனிய தமிழ் ஏடு
தனது இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி
நடாத்தும் போட்டிகளில் கலந்துகொள்ள
உங்களை அன்புடன் அழைக்கிறேன்.
போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.
ஒன்று நேரடியாக நீங்கள் கலந்து கொள்ளக்கூடிய போட்டி.
நேரடியாகக் கலந்துகொள்ளமுடியாதவர்களுக்காக
எழுத்துமூலமான போட்டி இன்னொன்று.

**எழுத்துமூலமான போட்டிகள் பின்வருமாறு:-**
**1.உறுப்பெழுத்துப் போட்டி:**

அடுத்த பக்கத்தில் தமிழின் தொன்மை என்னும் கட்டுரை இடம்பெற்றுள்ளது.இக்கட்டுரையில் அடைப்புக்குள் இருக்கும் பந்தியை அழகாய்,உறுப்பமைய நீங்கள் எழுதி அனுப்பவேண்டும்.

**2.சித்திரம் வரைதல் போட்டி:**

உங்களுக்கு விருப்பமான பறவை அல்லது மிருகம் அல்லது இயற்கைக்காட்சி ஒன்றினை நீங்கள் வரைந்து வர்ணம் தீட்டி அனுப்பவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3.சொற்களைக்கண்டுபிடித்தல்:

கீழே சில பொதுக் கேள்விகள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றின் கீழுள்ள கட்டத்தினுள் எழுத்துக்கள் சிதறிக் கிடக்கின்றன.
கேள்விகளுக்கான விடைகளைக்கண்டுபிடித்து அவற்றுக்கான எழுத்துக்களைத்தவிர்த்துவிட்டுப் பார்த்தீர்களானால் சில எழுத்துக்கள் எஞ்சியிருக்கும்.
அந்த எழுத்துக்களை இணைத்தால்,பூவரசு மூலம் நீங்கள் அறிந்த ஒரு வாசகம் உருவாகும்.
உங்கள் விடைகளுடன் அந்த வாசகத்தையும் நீங்கள் எழுதி அனுப்பவேண்டும்.

வினாக்கள்:

1. நம்மைப் பெற்ற அன்னையை நாங்கள் இப்படி அழைக்கிறோம்?
2. பாட்டுக்கு ஒரு புலவன் என்று வர்ணிக்கப்படும் மகாகவி?
3. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று?
4. ஐக்கிய ஜெர்மனியின் தலைநகரம்?
5. நமது தாயகத்தில் முருகன் ஆலயங்களால் பேர்பெற்ற ஊர்களில் ஒன்று?
6. யாழ்ப்பாணத்தைக் கடைசியாக ஆண்ட தமிழ்மன்னன்?
7. லண்டனில் மிகக்குறைந்த வயதில் பட்டதாரியான தமிழ் மாணவன்?
8. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அரசமரக்கிளையைக் கொண்டுவந்த பெண்மணி?
9. நமது தாயகத்தின் விடுதலைக்காக தண்ணீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை அர்ப்பணித்த தியாகியின் இயற்பெயர்?
10. இஸ்லாமியரின் வேதநூல்?
11. மூன்றுவயதில் தேவாரம் பாடிய சைவக்குழந்தை?
12. சமாதானத்தின் சின்னமான பறவை?
13. அமெரிக்கப் பாடகர் மைக்கல் ஜக்சனுடன் (Black or White) பாடல் காட்சியில் நடனமாடும் தமிழ்ப்பெண்ணான யமுனா பிறந்த இடம்?
14. இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுவது?
15. ஆண்டுதோறும் அதிக அளவில் தமிழ்மக்கள் பிரார்த்தனைக்காக ஒன்றுகூடும் (ஜேர்மனியிலுள்ள) மரியாளின் திருப்பதி?

(சிதறிய எழுத்துக்களும் போட்டி விதிகளும் 50ம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழின் தொன்மை.

உலகில் தோன்றிய மொழிகள் பல.
அவற்றுள் ஏட்டு வழக்கில் மட்டும் அமைந்துள்ள மொழிகள் சில;
பேச்சுவழக்கில்மட்டும் அமைந்துள்ள மொழிகள் சில; ஏட்டிலும்
பேச்சிலும் அமைந்துள்ள மொழிகள் பல.ஏட்டு வழக்கிலும் பேச்சு
வழக்கிலும் அமைந்துள்ள மொழிகளுள் முதலிடம் பெறுவது தமிழ்மொழி.
இம்மொழி இலக்கண வரம்புடையது;இலக்கிய வளன் உடையது;
தொன்மை வாய்ந்தது; சிறப்புமிக்கது;பிறமொழிகளின் துணையின்றித்
தனித்து இயங்கும் ஆற்றல் அமைந்தது.உயர் தனிச்செம்மொழி என்று
மொழிநூல்வல்லுனரால் போற்றப்படுவது.

தமிழ்மொழியையன்றி வேறு எம்மொழியையேனும் தாய்மொழியாகக் கொண்ட ஒருவனை அவனது தாய்மொழியில் மிகவும் தொன்மைவாய்ந்த நூல் எது எனக்கேட்டால் அவன் தனது தாய்மொழியில் மிகவும் பழையதொரு நூலின் பெயரையே கூறுவான்.அந்நூல் எதுவாயினும் அதொரு செய்யுள் நூலாகத்தான் இருக்கும்.எம்மொழியாயினும் அம்மொழியில் முதன்முதல் தோன்றியநூல் செய்யுள்நூலாகத்தான் இருக்கும். ஏனெனில் மனிதன் சைகை காட்டிக்கருத்துக்களை வெளிப்படுத்தும் நிலைமாறி பேசத்தொடங்கி நாகரீகம் வரப்பெற்றபின் தன் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை செய்யுட்கள் வாயிலாகத்தான் வெளிப்படுத்துவான். மனிதனின் மனம் பண்பட்டபொழுதெல்லாம் உள்ளம் கனியும்பொழுதெல்லாம் செய்யுள் வெளிப்படும்.எம்மொழியாயினும் முதன்முதல் செய்யுளே தோன்றும்.

அழகிய காட்சிகளைக்கண்டால் அறிவுநுட்பம் அமைந்த மனிதனின் மனம் பண்படும்.காலையில் கடலிடத்தே கதிரவன் உதயமாகும்காட்சி, மாலையில் செக்கச்செவேலென்ற வானக் காட்சி,இரவினில் வெண்மதியின் தண்ணனிலவு
பொழியும் காட்சி,மலையினின்று வீழும் அருவிக்காட்சி,பெருக்கெடுத்தோடும் ஆற்றுநீர்க்காட்சி,பச்சைக்கம்பளம் விரித்தாற்போல பசும் புற்றரைக்காட்சி, பன்னிற மலர்கள் மலர்ந்தசோலைக்காட்சி,போன்றவற்றை பார்த்தவுடன் நுண்ணிய அறிவு வாய்ந்த மனிதனின் மனம் பண்படும். அவ்வாறு பண்பட்ட மனிதன் தன்னைமறந்து பாடல்களைப்பாடுவான். இவ்வாறு பாடுபவனை நாம் புலவன் என்கிறோம்.இவற்றைக்கருத்திற்கொண்டு நோக்கினால் ஒரு மொழியில் முதன்முதல் செய்யுள்நூல்தான் தோன்றும் என்னும் உண்மை புலப்படும்.இவ்விதிக்கு எம்மொழியும் விலக்கன்று.ஆனால், தமிழறிவு நன்குவாய்ந்த தமிழ்மகனொருவனை இன்றுள்ள தமிழ்நூல்களுள் மிகவும் தொன்மை வாய்ந்ததெது என்று கேட்டால் அவன் தொல்காப்பியமே மிகவும் தொன்மைவாய்ந்த நூல் என்பான். தொல்காப்பியம் என்பது ஓர் இலக்கண நூல்.தொல்காப்பியர் என்னும் முனிவர்

அந்நூலை இயற்றினார்.அது கடல்போல்பரந்த ஒரு பெரு நூல்.

www.tamilarangam.net

அந்நூலுக்கு ஆறு உரையாசிரியர்கள் எழுதிய உரைநூல்கள் கிடைத்துள்ளன.
ஒருமொழியில் முதன்முதல் இலக்கணநூல் தோன்றியிருக்கவே முடியாது.
அவ்வுண்மையை—

*"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே*
*இலக்கணம் இன்றி இலக்கியம் இன்றே*
*எள்ளின்(று) எண்ணெய் எடுப்பதுபோல*
*இலக்கியத்தினின்(று) எடுபடும் இலக்கணம்"*

என்னும் நூற்பாவிலிருந்து தெளியலாம்.இப்பாவை அகத்தியர் இயற்றினாரென்று சொல்லப்படுகிறது.எனவே இலக்கியமே முதன்முதல் தோன்றும் என்பதையும்,அந்த இலக்கியத்தின் பொது இயல்புகளையும், அமைதிகளையும்,அமைப்புக்களையும் கூறுவதே இலக்கணம் என்பதையும் நாம் உணரலாம்.இவ்விதிக்கு தமிழ்மொழி இலக்காகாது என்பது உறுதி.

தொல்காப்பியம் இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்குமுன் தோன்றியதென்பர் ஆராய்ச்சி அறிஞர்.அத்தனை ஆண்டுகட்குமுன் தோன்றியதோர் இலக்கணநூல்தமிழ்மொழியில் தோன்றியதென்றால், அதற்கு பலநூறு ஆண்டுகட்குமுன்பே தமிழில் இலக்கியநூல்கள் தோன்றியிருத்தல்வேண்டும்.அவ்வாறுதோன்றிய இலக்கியநூல்கள் தமிழ் மக்களின் தவக்குறைவால் மறைந்துபோய்விட்டன.இருமுறை கடல் பொங்கிவந்து,தமிழ்நாட்டின் பெரும்பகுதியை கவர்ந்துவிட்டதென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.அத்தகைய கடல்கோள்களினால் தமிழ்மொழியில் தோன்றிய பழம்பெரும் நூல்கள்பல மறைந்து போயிருத்தல்வேண்டும்.
தலைச்சங்கம்,இடைச்சங்கம்,கடைச்சங்கம், என மூன்று சங்கங்கள் வெவ்வேறு காலங்களில் நடைபெற்றன.சங்கங்களை நிறுவி வளர்த்தபெருமை பாண்டியமன்னர்கட்கு உரியது.
தலைச்சங்க காலத்திலும்,இடைச்சங்ககாலத்திலும்,தோன்றிய இலக்கியநூல்கள் பலவும் இலக்கண நூல்கள் சிலவும் கடல்கோளினால் மறைந்துபோய்விட்டன.கடல்கோளுக்கு தப்பிப்பிழைத்த நூலகள் மிகச்சில.அவற்றுள் ஒன்றே இடைச்சங்க காலத்தில் தோன்றிய தொல்காப்பியம் ஆகும்.இடைச்சங்ககாலம் நிறுவப்பெற்ற இடம் கவாடபுரம் என்று தமிழ்நூல்கள் குறிப்பிடுகின்றன.வடமொழியில் இராமாயணத்தை எழுதிய வால்மீகிமுனிவர் குறிப்பிடும் கவாடம்,இடைச்சங்கம் நிறுவப்பட்ட கவாடபுரமேயாகும். இராமாயணம் கி.மு. எழுநூறுக்கு முற்பட்டதென பண்டார்க்கர் என்னும் சரித்திரப்பேராசிரியர் கூறுகின்றார்.எனவே இடைச்சங்கம் இற்றைக்கு இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன் நடந்ததென்பது தெளிவுறும்.இடைச்சங்ககாலத்தே தோன்றிய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்குப் பிறகுதோன்றிய இலக்கிய நூல்கள், தொல்காப்பியனார் வரையறுத்த இலக்கணவிதிகள் பலவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாக உள்ளன.
தமிழ்மொழி தெய்வத்தன்மை வாய்ந்ததென்பது உண்மையே. தமிழில் தோன்றியுள்ள பக்திப்பாடல்கள் கணக்கற்றவை. சிவபிரானார் தமிழ்மொழியை இயற்றினார் என்று கூறுதல் மொழிநூல் கருத்துக்கு மாறானதாகும்.தமிழர் உபசாரவழக்கினால் அவ்வாறு கூறியுள்ளனர் என்பதே பொருந்தும்.

*"ஆதியில் தமிழ்நூல் அகத்தியற்(கு) உணர்த்திய*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*மாது ஒரு பாகனை வழுத்துதும்''*
என்றும்,
*''தழல்புரை நிறக்கடவுள் தந்த தமிழ்''*
என்றும்,
*''இருமொழிக்கும் கண்ணுதலார் முதல்குரவர்* ''என்றும்
தோன்றியுள்ல அடிகள் உபசார வழக்கினால் தோன்றியவை என்றே கொள்ளவேண்டும்.
இவ்வகை கருத்தினால்,தமிழில் தோன்றிய நூல்களுக்கும் தமிழ் மக்கள் தெய்வத்தன்மையை ஏற்றிக் கூறியுள்ளனர்.அவர்கள் திருவள்ளுவருக்கும் தெய்வத்தன்மையை ஏற்றிக்கூறியதில் வியப்பில்லை. அவ்வாறு கூறியமை அவர்களுக்கு திருவள்ளுவரிடத்திலும், திருக்குறளிடத்திலும் உள்ள பெருமதிப்பையே உணர்த்துகிறது.
இன்று தமிழ்மொழியின் பழந்தமிழ்ப் பண்பாட்டையும்,பழந்தமிழ்க் கருத்துக்களையும் பாதுகாத்து நிற்கும் நூல்கள் தொல்காப்பியமும் திருக்குறளுமே.தொகாப்பியம் என்னும் இலக்கணநூல் எழுத்துக்கும் சொல்லுக்கும்,செய்யுளில் அமைக்கவேண்டிய அழகுக்கும்,செய்யுள் இயற்றுதற்கும்
இலக்கணம் கூறுவதுடன் மக்களுடைய அகவாழ்வுக்கும் புற வாழ்வுக்கும் இலக்கணம் கூறுகிறது.திருக்குறளோ மக்கள் ஒழுகவாறு இன்னவாறு அமையவேண்டுமென்றுகூறி உலகமக்களுக்கு நல்வழி காட்டுகிறது.தொல்காப்பியம் தமிழ்மக்களுக்கென்று எழுந்தது.திருக்குறளோ உலகமக்கள் எல்லார்க்கும் உயர்ந்த பண்பாடுகளை உணர்த்தும் நோக்கத்துடன் எழுந்தது.
எனவே அந்நூல் உலகநூல்களுள் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. முடிவாகக்கூறுவதாயின் திருக்குறளைப் பெற்றதால் உலகில் தமிழ்மொழி தனிப்பெருமை பெற்றதெனலாம்.

இவ்வாறான சிறப்பைப்பெற்ற திருக்குறளையும் அதனை எமக்களித்த திருவள்ளுவரையும் பற்றி அடுத்த இதழில் தொடர்வோம்.

–சித்ரா மணிவண்ணன்.

---

இறுக்கெழுத்துப்போட்டி இல: 3

பரிசுபெற்றவர்:
தாரிணி கணேசமூர்த்தி
சுவிட்சர்லாந்து.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்ன நடக்கிறது?

- இந்தியாவில் எயிட்ஸ் நோயை ஏற்படுத்தும் கிருமிகளால் தற்போது 5 லட்சம் முதல் 10 லட்சம் பேர்வரை பீடிக்கப்பட்டுள்ளனர். 2000ம் ஆண்டளவில் இத்தொகை 50 முதல் 80 லட்சமாக அதிகரிக்குமெனவும் ஒரு கணிப்பீடு தெரிவிக்கின்றது.

- இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கை அகதிகளின் பராமரிப்புக்காக அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் ஆகியநாடுகள் 10 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. அவுஸ்திரேலியாவும் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. ஜனவரி 22ம் திகதி முதல் மே மாதம் 15ம் திகதிவரை 6940 குடும்பங்களைச்சேர்ந்த 23109 பேர் வந்துசேர்ந்துள்ளனர் ஆகஸ்ட் 3ம் திகதிமுதல் திங்கள் வியாழன் ஆகிய இரு தினங்களில் இந்தியன் எயர் லைன்ஸ் விமானங்கள் இந்தியாவில் இருந்து அகதிகளை ஏற்றிச்செல்கின்றன. தினம் ஒன்றுக்கு 4 விமானங்கள் இவ்வாறு செல்கின்றன இத்துடன் ஆகஸ்ட் 10ம் திகதிமுதல் கப்பல்களிலும் அகதிகள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

- சுவிஸ்நாட்டு அரசாங்கம் அம்பாறை மாவட்டத்தின் பின் தங்கிய கிராமங்களின் அபிவிருத்தியிலும் அகதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் அக்கறைசெலுத்த முன்வந்துள்ளது.இலங்கையிலுள்ள சுவிஸ் தூதுவர் அம்பாறைமாவட்டத்துக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் செய்து இதுபற்றி ஆராய்ந்துள்ளனர்.

- சுவிற்சர்லாந்துநாட்டில் வதிவிட அந்தஸ்து வழங்கப்படாமல் அகதிகளாகத்தங்கியிருக்கும் 5000க்கும் மேற்பட்ட இலங்கையர்களைக் கட்டம் கட்டமாக தாயகம் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு உத்தேசித்துள்ளது. இவ்வாறு ஒரு சில ஐரோப்பியநாடுகளும் ஆராய்ந்துவருகின்றன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.இதுபற்றி ஆராய சுவிஸ் அதிகாரிகள் குழுவொன்று இலங்கை சென்றுள்ளது.

- சென்ற ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி ஊர்காவற்றுறைப்பகுதியில் உள்ள அராலித்துறையில் இடம்பெற்ற நிலக்கண்ணிவெடிச் சம்பவத்தின்போது வட பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ

**—எஸ்.கந்தசாமி**

www.tamilarangam.net

உட்பட 9 இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். யாழ் குடாநாட்டுக்கு பொறுப்பான பிரிகேடியர் விஜய விமலரத்ன, கடற்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கொமடோர் மொஹான் ஜயமஹா,மேலும் 3 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கொல்லப் பட்டவர்களில் அடங்குவர்.இவர்கள் சென்ற வாகன சாரதியும் கொல்லப்பட்டுள்ளார்.யாழ் குடாநாட்டின் மீது விரைவில் ஆரம்பமாகவுள்ள பாரிய இராணுவ நடவடிக்கைகள்பற்றிய ஆயத்தநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த சமயம் ஏற்பட்ட இவ்விழப்பு இலங்கை அரசுக்கு ஈடுசெய்யமுடியாத ஒன்றே.
1983ம் ஆண்டுமுதல் கடந்த ஒன்பது வருடங்களாக நடைபெற்றுவரும் யுத்தத்தில் உயர்தர அதிகாரிகள் பலர் ஒரேசமயத்தில் பலியானது இதுவே முதன்முறையாகும்.
கடந்த நவம்பர் மாதம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு தனது முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளதாக இலங்கை அரசு கூறிவரும் தீவுப்பகுதியிலேயே இச்சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

❋ வாழைச்சேனையை அண்மித்துள்ள தமிழ்க்கிராமமொன்றில் 39 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இது கருதப்படுகிறது.

❋ எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளராக பில்கிளிண்டனும், குடியரசுக்கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதியாகவுள்ள ஜோர்ஜ் புஷ்சும் போட்டியிடுகின்றனர்.1981ம் ஆண்டுமுதல் குடியரசுக்கட்சி வேட்பாளர்களே தெரிவாகிவருகின்றனர்.1981 முதல் 1989 வரை ரொனால்ட் ரீகனும் அதைத்தொடர்ந்து 1989ம் ஆண்டுமுதல் ஜோர்ஜ் புஷ்சும் ஜனாதிபதியாக இருந்துவருகின்றனர்.இம்முறை ஜனநாயகக்கட்சி வேட்பாளருக்கு சென்ற தேர்தல்களில் இருந்ததைவிட அதிக ஆதரவு இருப்பதாக அண்மைய கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்த இதழில் இடம்பெறவிருந்த

- குட்டித்திரையருகே கொஞ்சநேரம்.
- என் வாசகர்களைத்தேடி...
- சந்திப்போம் சிந்திப்போம்!
- அன்னை தெரேசா.
- பகவத்கீதையும் பரிசுத்த வேதாகமும்

ஆகிய அம்சங்கள் அடுத்த இதழில்!

www.tamilarangam.net

## கிட்டாத சொந்தத்தில்...!

இதயத்தைத்திறந்தேன்
எதிரில் உன் எழில் வடிவம்!
எனினும்–
எட்டாத தூரத்தில்
கிட்டாத சொந்தத்தில்

எத்தனை யுகங்கள் நான்
உனக்காகத்தவம் கிடந்தேன்...!
தூரத்தே உன்னைவைத்து
நினைவுகளால் தொடுவதிலும்
ஒரு சுகம்தான்!
ஏனெனில்–
காதலர்கள் என்றுசொல்லிக்
கருத்துக்கள் ஒருமித்துக்
கைப்பிடித்தபலபேர்க்கு
காதல் இன்று கானல் நீர்
என்பதனால்...
உன்னை–
நினைவுகளால் நேசித்து
நினைவுகளால் மணமுடித்து
நினைவுகளால் உனைவருடி
வாழ்கின்ற பொழுதுகளும்
வசந்தங்கள்!
ஆதலினால்–
எட்டாத தூரத்தில்
கிட்டாத சொந்தத்தில்
இனியவளே..நீ
என்றும் இருந்துவிடு!

தேகத்தைப்பங்கிட்டு
தேகசுகம் தேடுவதே
தீராத நோய் இந்த மானிடர்க்கு!
நானோ....
தேகத்தினுள்ளே சிதையாமல் இருக்கின்ற
ஆத்துமத்தைத்தேடி அலைகின்றேன்
எனக்குள்ளே–
ஆத்துமமாய் உன்னை அறிகின்றேன்.
காதல் என்றால்
தினமும் தினவெடுக்கும்
காமமெனக் கொள்பவர்க்கு
விதிவிலக்கு நான்.
ஏனெனில்–
என் உடலைக்காதலிக்க
எத்தனையோ பேர் வருவார்...
உன் உடலும் அதுபோல...
ஆனால் நாம்
ஆத்துமத்தைக்காதலிக்கக் கற்றவர்கள்!
ஊனை மறந்து
நம் உயிராய்க்கலந்தவர்கள்.
காதலின் உண்மையை நான்
கண்டுகொண்டேன் உன்னிடத்தில்
ஆதலினால்
இனியவளே
எட்டாத தூரத்தில்
கிட்டாத சொந்தத்தில்
நீ என்றும் இருந்துவிடு!

–இளந்தீவகன்.

## காதலென்றால்...!

காதல் செய்வீர்!
காதல் செய்வீர்!
காலமெல்லாம் அழியாத
காதல் செய்வீர்!
ஜாதிமதம் பார்க்காது
காசுபணம்கேட்காது
தோலின் நிறம்தோற்றாது
நாடுநிலம் நாடாது
அன்பு ஒன்றே வேதமென்று
அரும்புகின்ற உண்மைக்காதல்
ஆதலினால் அனைவருமே
காதல் செய்வீர்!

ஒருவர்மட்டும் இதயத்திலே
உரிமையுடன் வாழுகின்ற
தமிழருக்கே உரிமையான
பண்புகொண்டு
தரணியுள்ளோர் காதல்செய்வீர்!

காதலினால் மாத்திரமே
சீதனத்தை ஒழித்திடலாம்
ஆதலினால் அனைவருமே
காதல் செய்வீர்!

காதலென்றால் அன்பு
கடவுளென்பதும் அதுவே
ஆதலினால் அவனியுள்ளோர்
அனைவருமே காதல்செய்வீர்!

–ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்.

www.tamilarangam.net

# தமிழ்நாட்டைச் சுற்றினோம்

(முன் இதழ் சுருக்கம்:
முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கொலையுண்ட ஒன்றரை மாதங்களின்பின் தமிழ்நாட்டுக்குச்சென்றோம்.அந்தப்பிரயாண அனுபவம் மேலும் தொடர்கிறது.நேரடிக்குறிப்புக்கள் எதுவுமின்றி இக்கட்டுரை எழுதப்படுகின்றது.சென்னை நகர அனுபவங்கள் இந்த இதழிலும் உங்களை நாடி வருகின்றன.)

*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே*
*உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும்*
*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே*
*துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்தபோதிலும்*
*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.*

—மகாகவி பாரதியார்.

தமிழ்நாட்டில் திடுக்கிடும்செய்தி என்றால் அது தினத்தந்தி!
—அதிகமாக விற்பனையாகும் பத்திரிகை அது.அதனை வாசிக்காவிடில் பலருக்குத்தலைவலியே ஏற்பட்டுவிடுமாம்.
அன்று நான் வாசித்ததும் தினத்தந்தி.
அதில் ஒரு திடுக்கிடும் செய்தி.
அந்தச்செய்தியும் தமிழீழ விடுதலைப்புலிகளோடு சம்பந்தப்பட்டது.
ராஜீவ் காந்தி கொலையுடனும் தொடர்புடையது.
செய்தியின் சுருக்கம் இதோ:
முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக வேதாரண்யம் மிராசுதார் சண்முகம் கைதானார்.இவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே நெருங்கியதொடர்புண்டு.இவரின் வீட்டில் ராஜீவ் கொலைப்படையே தங்கி இருந்துள்ளது.சிவராசன்,சுபா,தாணு ஆகியோருடன் இவருக்கும் தொடர்புண்டு.
சாதாரண தொழிலாளியாக இருந்த சண்முகம் மிராசுதார் ஆனது எப்படி?கள்ளக்கடத்தல்செய்தே இவர் பணக்காரரானார்.கைதான சண்முகம் சென்னைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.
ராஜீவ் கொலைபற்றிய மர்மங்கள் இவர்மூலம் துலங்கும் என சி.பி.ஐ. அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.இவரின் வீட்டில்வைத்துத்தான் ராஜீவ் கொலைக்கான திட்டம் தீட்டப்பட்டது.
—இப்படி அந்தச்செய்தி தொடர்ந்தது.

—வி.ஆர்.வரதராஜா—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேதாரண்யம் தஞ்சைமாவட்டத்தைச்சேர்ந்தது.அங்கு கோடியக்காடு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சண்முகம்.
மத்திய புலனாய்வுத்துறையினரிடம் சிக்கிய இந்தச்சண்முகம் ஒழுங்காக வீடு திரும்புவாரா?
–இப்படி ஒரு சந்தேகம் என்னுள் எழுந்தது.
தமிழ்நாட்டில் காலை ஆறுமணிக்கெல்லாம் பொழுது நன்றாகப் புலர்ந்துவிடும்.ஆனால்,
காலை ஒன்பது மணிக்குப்பிறகுதான் நாடு விழித்துக்கொள்ளும்.
மக்கள் தங்கள் கடமைகளில ஈடுபடும் நேரமது.
இங்கு ஜெர்மனியில் மக்கள் குளிரிலும்கூட அதிகாலை எழுந்துவிடுவார்கள்.
காலை ஏழுமணிக்கெல்லாம் இங்கு நாடு விழித்துக்கொள்ளும்.
ஆனால் அங்கு அப்படியல்ல.அங்கும் நேரத்துடன் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டால் நாடு முன்னேறும்.
நாம் புறப்பட ஆயத்தமானோம்.
நண்பர் வைரவனின் மகன் எங்களை அழைத்துச்செல்ல வந்துவிட்டார்.
வாடகைக்காரும் வந்துவிட்டது.
வடபழனி,கருமாரியம்பாள் ஆலயங்கள் மிகவும் புகழ்பெற்றவை.
சென்னைக்கு அருகில் உள்ள ஆலயங்கள் இவை.
முதலில் சென்னைநகரைச் சுற்றிப்பார்க்க நாம் திட்டமிடவில்லை.
தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளைச் சுற்றிப்பார்த்துவிட்டு இறுதியில் சென்னை!
இதற்குள் ஒரு பிரச்சினை தோன்றியது.
''புதிதாக ஒரு புடவைவாங்கியதன் பின்பே ஆலயம் புறப்படலாம்.''
–என் இல்லாளின் புலம்பல் இது.
இந்தப்புடவைப் பிரச்சனை இன்று நேற்று ஏற்பட்டதல்ல.பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.
ஆனால் இல்லாளிடம் இதனை இல்லாள் கேட்டால் பிரச்சனை.கணவனிடம் இருக்கும்போது (பணம்) கேட்டால் தாராளம்...!
இராமாயணம் பெண்களுக்குக் கற்றுத்தரும் பாடங்களில் ஒன்று–
இன்பப்போதையிலிருந்த தசரதனிடம் இரண்டு வரங்கள் வேண்டும் என்று கைகேயி கேட்டாள்.
''கேள் தருகிறேன்!''என்று அவரும் வாய்மொழிந்தார்.
''சந்தர்ப்பம் வரும்போது கேட்கிறேன்!''என கைகேயியும் மறுமொழி கூறினாள்.
ஆனால் எதிர்பாராத சந்தர்ப்பம் ஒன்றில் அந்த வரங்களைக் கேட்டதனால் இராமாயணம் வரலாறாகியது.
இந்த யுகத்துப்பெண்கள் கணவன்மாரிடம் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் வரங்களை வாங்கி அடுக்கிவைத்துக் கொள்கிறார்கள்.
கைகேயியை மிஞ்சிவிட்டார்கள்.
தேவைப்படும்போதெல்லாம் அவற்றை அள்ளியெறிகிறார்கள்.ஆனால் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் கேட்கும்போதுதான் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.இராமாயணம் அறிவுறுத்தும் உண்மை இது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''இங்கு உங்கள் நிலையும் அதுதானா?'' என்று கேட்டுவிடாதீர்கள்.
புடவை சாதாரணப்பிரச்சனை.
புடவை உடன் வாங்கப்பட்டது.
தமிழ்ப்பெண்களுக்குப் பொருத்தமான ஆடை புடவை.அதற்கு நிகராக வேறு எந்த ஆடையையும் குறிப்பிடமுடியாது!
மல்லிகை மொட்டு பூச்சரம் அங்கு மலிவு.
ஒரு ரூபா கொடுத்தால் தலை நிறையப் பூ.இயற்கைவாசனை!
செயற்கைவாசனை திரவியங்கள் அவசியமில்லை.
''மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ!''
கவிஞர் பாடியதில் ஆழமான அர்த்தம் உண்டு.
தமிழ்நாட்டுப் பெண்களை மல்லிகையிலிருந்து எவரும் பிரித்துவிட முடியாது!
அங்கே மல்லிகையில்லா மங்கையரைக்காண்பது அரிது.
கருமாரியம்மன் ஆலயத்திற்கு முதலில் சென்றோம்.மிகவும் சக்திவாய்ந்த ஆலயம்.காலைநேரங்களில் கூட்டம் குறைவு.
ஆலயத்திற்குச் செல்வதற்குமுன்பு வியாபாரிகளின் தொல்லைகளிலிருந்து தப்பவேண்டும்.நண்பரின் மகன் எங்களுடன் இருந்ததினால் அந்தச் சிரமங்களிலிருந்து ஓரளவு எம்மை விடுவித்துக்கொண்டோம்.
அர்ச்சனை செய்வதற்காக பணம் கட்டி துண்டு பெற்றுக்கொண்டோம்.
அப்போது—
''மூலஸ்தானத்துக்கு அருகில் நின்று அம்மனைத்தரிசிக்க சிறப்புவழியுண்டு அதற்குக்கட்டணம் 25 ரூபா!'' என்றார் அர்ச்சனைத்துண்டு கொடுப்பவர்.
''அப்படியானால் இந்தத்துண்டு எதற்கு?'' என்று கேட்டேன்.
''இது தனியாக அர்ச்சனைக்கு மட்டும் !'' என்றார்.
சிறிதுநேரம் சிந்தித்தேன்.
இதற்குள் என் இல்லத்தாள் முந்திக்கொண்டாள்..
''சிறப்புவழி ஒரு டிக்கட் எடுங்கள்!''
—எனக்குமாத்திரம் கேட்குமாறு முணுமுணுத்தாள்.
ஒரு டிக்கட் எடுத்துக்கொண்டு எல்லோரும் வெளியே வந்தோம்.காக்கிச்சட்டை போட்டதொரு காவலாளி எங்களை எதிர்கொண்டான்.
கையில் ஒரு தடிவைத்திருந்தான்.
''என்சார்,அஞ்சுபேர்வந்திருக்கீங்க..ஒருடிக்கட் போதுங்களா?'' என்று அவன் கேட்டான்.
நான் சிரித்துக்கொண்டே அவனை அருகில் அழைத்தேன்...
''உனக்கு நாய்—கழுதை கதை தெரியுமா?''
''தெரியாதுங்க...!''
''நாயின்வேலை இரவில் திருடர்வராமல் வீட்டைப் பாதுகாப்பது.
கழுதையின் வேலை பொதிசுமப்பது...ஆனால் நாய்க்கே செல்வாக்கு அதிகம்...அந்தவேலையை நாம் செய்தால் என்ன என்று கழுதை சிந்தித்ததாம்....அடுத்த இரவில் கத்திக்கொண்டு வீட்டைச்சுற்றி ஓடியதாம்..
எஜமான் அதைக்கண்டு கழுதையை அடித்துத் துரத்திவிட்டாராம்..
இதில் உனக்கு ஏதாவது புரியுதா?'' என்று நான் கேட்டேன்.

www.tamilarangam.net

''ஒன்னும் புரியலேங்க..''என்றான் .
''ஒன்றும் அவசரமில்லை...நான் கோயினுக்குப் போய் வருகிறேன்...யோசித்துவை..''
என்றேன்..
கோயிலினுள் சென்றோம்...உள்ளே இறைவனை தரிசிக்கும் பகுதி அப்படியே கம்பி வலைகளினால் மூடப்பட்டிருந்தது..
ஆலய மூலஸ்தானம் வெளியே தெரியாதபடி மறைப்புக்கள் போடப்பட்டிருந்தன..ஆலயத்தை ஒருமுறை சுற்றிவந்தோம்.
யாழ்ப்பாண சினிமாத்தியேட்டர்களில் கலரிக்குச் செல்லும் பகுதியை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்..அவ்வாறான பலத்த இரும்புக்கம்பி வலைகள்.
பக்தர்கள் இறைவனை தரிசிக்க வரிசையாக இவற்றினூடு செல்லவேண்டும்.
இடையிடையே இரும்புக்கதவுகள்..உள்ளே கூட்டம் என்றதும் கதவுகள் மூடப்படும்.
சிறப்புவழி என்றாலும் இதே நிலைதான்.
''இலவசம் என்றொரு அறிவிப்பைக்கவனித்தேன்...பக்தர்கள் இலவசமாக கட்டணம் ஏதும் செலுத்தாமல் இந்த வரிசையில் செல்லலாம்...
இலவசமாகச்செல்ல கூட்டம் அதிகம்..ஆனால் அவர்களால் மூலஸ்தானத்திற்கு அருகில் போகமுடியாது.இருப்பினும் சுவாமி தரிசனம் செய்யமுடியும்.
என்மனைவி 25 ரூபா சிறப்புவழியில் பூஜைத்தட்டுடன் சென்றாள்.
நானும் பிள்ளைகளும் மண்டபத்தில் ஓர் அமைதியான இடத்தில் அமர்ந்து இறைவனை (கருமாரியம்மன்) தியானித்தோம்.
இறைவனை துதிக்கவும் கட்டணமா..'' இதுவா இந்துமதம் என்று கேள்வி எழுப்பாதீர்கள்.
கட்டணம் இறைவனுக்கல்ல..ஆலய பரிபாலகர்க்கு! ஆலயத்தைப் பரிபாலிக்கச் செலவாகும் பணம் பக்தர்களிடமிருந்து இவ்வாறு அறவிடப் படுகின்றது.
இந்துமதத்தில் தெளிவுபெற்றவர் இவ்வுலக மாயை எது என்பதை எளிதில் புரிந்துகொள்கின்றனர்.
தமிழ்நாட்டு இந்து ஆலய வழிபாட்டு முறைகளில் மாற்றம் தேவை என்பதை பலரும் எடுத்துக்கூறிவருகின்றனர்.மனிதன் ஏற்படுத்தியதை மனிதன் மாற்றிக்கொள்ளலாமல்லவா''
சிறப்பு வழியில்சென்ற மனைவி திரும்பியதும் எப்படி என்று வினவினேன்.
பரம திருப்தி என்றாள்..ஆலய தரிசனம் முடிந்து வெளியேவந்ததும் காரைத்தேடினோம்.
கார் டிரைவர் எங்களைக்கண்டதும் காரைக்கொண்டுவந்தார்.இதற்குள் அந்தக் காக்கிச்சட்டைக் காவல்காரன் ஓடிவந்தான்.
''என்ன சார்...நாய்-கழுதை கதை சொன்னீங்க...ஒன்னுமே புரியலையே!''
என்றான்.
''அது எப்படி புரியும்...அந்தக் கதையில் வரும் கழுதை நீதான்!''
''சார்...!'' அதிர்ச்சியால் வாயைப்பிளந்தான்.
''நீ காவலாளி...அதைத்தான் நீ கவனிக்கவேண்டும்...மற்றவர் வேலையைப்பார்க்கப்போகாதே!''
இப்படிக்கூறியதும் காரில் ஏறிவிட்டேன்.
சிறிதுதூரம் சென்று திரும்பிப்பார்த்தேன்..அவன் திறந்தவாய் மூடாது

www.tamilarangam.net

அப்படியே நின்றுகொண்டிருந்தான்.அடுத்து–
புகழ்பெற்ற வடபழனி ஆலயத்துக்குச்சென்றோம்.அங்கு வழிபாட்டிற்கு ஓரளவு வசதியிருந்தது.விரும்பினால் சிறப்புவழிசெல்லலாம்.
(புதிதாக ஆலய மண்டபங்கள் கட்டப்பட்டிருந்தது.அங்கு எங்களைக் கண்டதும் ஐயர் எதிர்கொண்டழைத்தார்.அவரே எல்லாப்பூஜைகளையும் முன்னின்றுசெய்தார்.)
''பூஜ்யத்துக்குள்ளே ஒரு
ராஜ்யத்தை ஆண்டுகொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன்– அவனைப்
புரிந்துகொண்டால் அவன்தான் இறைவன்.''
கவிஞர் கண்ணதாசனுக்கு நிகர் அவர்தான். அர்த்தமுள்ள இந்துமதம் எழுதியவர் அவர்.
பூசைகள் பிரார்த்தனைகள் அனைத்தும் ஆன்மிகப்பசிக்கு அருமருந்து.
அங்கே ஐயர் பூசைத்தட்டுடன் வெளியே வந்தார்.
''நீங்கள் இறைவனுக்குச் சமஸ்கிருதமொழியால் பூசை செய்தீர்கள்..அதை தமிழில் செய்வீர்களா?''
–நான் அவரைக்கேட்டேன்.அவர் இப்படிக்கூறினார்:
''எல்லாம் வல்ல இறைவா! உன்னால் படைக்கப்பட்ட இவ்வுலகின் சகலமும் நலனே இருக்க உன் ஆசீர்வாதம் தேவை.மனிதர்கள் உட்பட சகல ஜீவராசிகளையும்–பூச்சி புழுக்கள் உட்பட–காப்பாற்று! புல்பூண்டுகள் மரங்கள்,நீர்நிலைகள்,காற்று எல்லாம் செவ்வனே அமையவேண்டும்.இந்தப் பிரார்த்தனையைச்செய்யும் புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்த வாதராஜா தன்னையும் தன் குடும்பத்தையும் ஏனைய சீவராசிகளைப் போன்று நோய்நொடியின்றும் காப்பாற்றுமாறு வேண்டிக்கொள்கிறார்.''
(இந்து மதத்தின் ஆழத்தைப்பார்த்தீர்களா? தனிப்பட்ட பிரார்த்தனையில்கூட பொது நலம் கலந்திருக்கும்.வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்தப்பிரார்த்தனை சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.)
நாங்கள் மீண்டும் ஹோட்டலுக்குத் திரும்பினோம்.எனது நண்பர் வந்து எங்களை அவரின் இல்லத்துக்கு அழைத்துச்சென்றார்.
(சென்னை அமைஞ்சகரையில் அவரின் வீடு இருந்தது.மக்கள் நெருக்கமாக வாழும் பகுதி.அருகில் ஒரு சந்தை.மக்கள் நூற்றுக்கணக்கில் வந்து போனார்கள்.ஆனால் மிகவும் அசுத்தமானது.நாற்றமெடுத்தது.மூக்கைப் பொத்திக்கொண்டுதான் சந்தையால் நடமாடமுடியும்.
அங்கு ஒரு புடவைக்கடை.அதைக்கண்டதும் மனைவி உள்ளேசென்றுவிட்டாள்.
கடையின் முதலாளி என்னை வரவேற்றார்.
என்னைப்பற்றி சுருக்கமான அறிமுகம் செய்துவைத்தேன்.அவரின் சொந்த இடம் எது என்று கேட்டேன்.
''வேதாரண்யம்!''என்று அவர் கூறியதும் நான் நிமிர்ந்துநின்றேன்.
''என்ன மிராசுதார் சண்முகத்தின் இடமல்லவா அது?''என்றேன்.
''நீங்கள் பத்திரிகைச் செய்தியை வாசித்துவிட்டீர்களா?...
மிராசுதார் சண்முகம் ஒருநல்ல மனிதர்.தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அவருக்குத் தொடர்பு உண்டு.யாருக்கு சார் புலிகளோடு

www.tamilarangam.net

தொடர்பில்லை'?...முன்னாள் இந்தியப்பிரதமர் இந்திரா காந்தியே தொடர்புவைத்திருந்தார்.மறைந்த முதலமைச்சர் எம்.ஜி..ஆருக்குத் தொடர்பு இருந்தது...
தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு உதவுபவர்கள் எல்லோரும் ராஜீவ் காந்தி கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்க முடியுமா'? ராஜீவ்காந்தி கொலை விசாரணை என்ற பெயரில் தமிழ்மக்களுக்கு எதிராக விசாரணை நடப்பது வருந்தத்தக்கது.தமிழ்மக்களின் பிரச்சனைக்காக புலிகள் போராடுகிறார்கள்...அவர்களுக்கு தமிழர்களாகிய நாங்கள் உதவாமல் வேறு யார் உதவி செய்வார்கள்'?''
—தமிழ்நாட்டுப்பிரஜை ஒருவரிடமிருந்து இவ்வாறானதொரு ஆணித்தரமான அபிப்பிராயத்தை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.
ராஜீவ் காந்தி கொலையையடுத்து புலிகள் வேட்டையாடப்படும் இந்தநேரத்தில் இப்படியும் ஒரு மனிதர்...
தமிழ்நாடு மாறவில்லை!
அந்தக்கடையிலும் புடவை வாங்கப்பட்டது....அன்று இரவு நாங்கள் அடுத்தநாள் புறப்படும் இடங்கள் குறித்து விவாதித்தோம்.
முதலில் திருச்சி.அடுத்து மதுரை.எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி.
அடுத்தநாள் காலை எழுந்ததும் மற்றொரு அதிர்ச்சி.
அதே தினத்தந்தி..ஆனால் செய்தி...என்னை மாத்திரமல்ல தமிழ்நாட்டு மக்களனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தும் செய்தி அது.
''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எதிர்பாராத திருப்பம்—
சி.பி.ஐ.காவலில் இருந்த மிராசுதார் சண்முகம் தூக்கில் தொங்கினார்! தற்கொலையா'?''

(அடுத்த இதழில் தொடரும்)

---

## அட்டைப்படக் கவிதை.

### விதவை.

ஏ! பெண்ணே!
நீ இழந்தது ஒன்றைமட்டுமே
எல்லாவற்றையும் இழந்துவிட்டதாக
வீண்பிரமை கொள்ளாதே.
ஈடுசெய்யமுடியாத எதுவுமே
உலகத்தில் இல்லை
உணர்ந்துகொள்!
உன்னைப்போல் வாழ்ந்த உன்முன்னோர்
வெள்ளைத்துணியைக் கட்டிக்கொண்டு
தங்களுக்குத் தாங்களே
சமாதானம் சொல்லிக்கொண்டார்கள்
அவர்கள் அழுத கண்ணீரில்
அவர்களே ஆழ்ந்துபோனார்கள்.
நீயும் அதே தவறைச்செய்யாதே!

உன் தடைகளை படிகளாக்கு
சமுதாயம் உனக்கு விதித்தகோடுகளை
தூக்கி நிமிர்த்து
அதனை பாய்மரமாக்கி பயணம் செய்.

கலைந்த உன் கூந்தலை துடுப்பாக்கு
அழகை வெளிக்காட்டு.
அழிந்துவிட்ட நித்திலத்துக்கீடாக
ஆதவனை எடுத்துவை
முக்காட்டை விலக்கிவிடு
உன் கதிரொளியில் பல
வெள்ளைப் பூக்கள்
நிறங்களைப்பெறட்டும்.

—அமுதநதி சுதர்சன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிறேமனில் தமிழ்க்கலைமன்றம்.

பிறேமன் நகரில்
கடந்த 3.7.92 அன்று
தமிழ்க்கலைமன்றம்
அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

நிர்வாக சபையில்–
தலைவர்:திரு.த.இரஜன்,
உபதலைவர்:திரு.இரா.உதயகுமார்,
செயலாளர்:திரு.சு.கந்தசாமி,
இணைச்செயலாளர்:திருமதி.சித்ரா பீலிக்ஸ்,
பொருளாளர்:திரு.தே.தங்கராசா,
பொதுச்சபை பிரதிநிதிகள்:
திரு.பரம் சிவலிங்கம்,
திரு.செ.யோகநாதன்
ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பிறேமன் தமிழ்க்கலைமன்றத்தின்
அறிமுகவிழாவை வாணிவிழாவாக
29.09.92 செவ்வாய்க்கிழமை
நடாத்துவதற்கு
ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலைமன்றம் சம்பந்தமான
கடிதத்தொடர்புகளுக்கு:

BREMEN TAMILISCHE KULTUR VEREIN
C/O KLAMOTTEN CAFFEE
LANGEMARCK STR.206
2800 BREMEN 1
GERMANY.

*" மேன்மையோடு நாம் ஒற்றுமையாய்
மேலைநாட்டிலும் கலைவளர்ப்போம்!"*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை.

# சீதனம்

கே.ஸ்ரீதாஸ்

ஜானிக்குப் பெரும் சங்கடமாகவே இருந்தது.
காலையில் நோத்துடனேயே எழுந்துகொள்கிறவன்...இன்றோ...
எழுந்துகொள்ளமுடியாமல்..எழுந்துகொள்ள மனமின்றி...
அவன் மனமோ சஞ்சலத்தில் தடம் புரண்டது.
அப்படி என்னவாக இருக்கும்?
அவனின் அண்ணனிடமிருந்து வந்த கடிதம்தான் அவனை இந்த அளவுக்கு ஆளாக்கியிருந்தது...
அவனுக்கு என்ன செய்வதென்றும் புரியவில்லை..என்ன பதிலை எழுதுவதென்றும் தெரியவில்லை...
ஜானின் சிந்தனையைக்கலைத்தவனாக—
''என்னடாப்பா ஒருநாளும் இல்லாதமாதிரி இண்டைக்குப் படுத்துக்கிடக்கிறாய் என்ன நடந்தது...? அப்படி என்ன சிந்தனை...? எழும்படாப்பா...இண்டைக்கு நல்ல வெதாய்க்கிடக்கு வெளியிலை போட்டுவருவம்.''
—சொல்லிக்கொண்டே அவனருகில் வந்தமர்ந்தான் பக்கத்து அறையினில் தங்கியிருக்கும் அவனது நண்பன் கண்ணன்.
''ஒன்றுமில்லையடாப்பா...எல்லாம் என் கல்யாணவிஷயத்தைப் பற்றித்தான்... என்ன செய்கிறதெண்டு தெரியேல்லை...சீதனம் தரமாட்டாங்களாம்... பெட்டையிடை படமும் அண்ணர் அனுப்பியிருக்கிறோ்...அந்தமேசைமேலை கிடக்கு பார்...''




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன் மன உளைச்சலை தன் நண்பனிடம் கொட்டினான் ஜானி.
''ஏண்டா இந்தப்பெட்டைக்கு என்ன...வடிவான பெட்டைதானே...அதுக்கென்ன சீதனமில்லாமல் செய்யிறது நல்லதுதானே...இப்ப உன்னிடம் இருக்கிற வசதிகள் காணும்தானே...இதுக்குப்போய் மண்டையைப்போட்டு உடைக்கிறாய்.... நீதானே எத்தனையோ கதை கவிதைகளில் சீதனம் வாங்குவது பிற்போக்குத்தனம் என்று எழுதுகிற நீ அதுவே உன் வாழ்க்கையில் வருகிறபோது நீ தயங்குவதுதான் வேடிக்கையாக இருக்கிறது... இப்படியெண்டால் எங்கடை சமுதாயம் எப்ப மாறப்போகுது?..எட நீயோ இப்படி...என்னாலை நம்ப முடியேல்லை...மனிதர்களுடைய மனங்களை யாராலும் வரையறுத்துச் சொல்லமுடியாது...அதுசரி..ஊருக்கு உபதேசம் உனக்கு இல்லைத்தானே!''
–பொரிந்து தள்ளினான் கண்ணன்.
''இஞ்சை பார் கண்ணன்...அண்டைக்கு இருந்த நிலைமைவேறை...இண்டைக்கு நான் இருக்கிற நிலைமை வேறை...இண்டைக்கு நான் இந்தநிலைமைக்கு வாறதுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பன் என்று உனக்கு நல்லாத்தெரியும்... நாங்கள் முந்தி கஷ்டப்பட்டுத்தான் வளர்ந்தனாங்கள்...அதுக்காகவேண்டி நெடுகிலும் கஷ்டப்படவேணுமெண்டில்லை...இப்ப வசதியாக வாழ்கிறன்... அந்தக்குடும்பத்துக்கைபோய் விழச்சொல்கிறியே...!இண்டைக்குச் சீதனம் வாங்காத ஆட்கள் யார் சொல்லுபார்ப்பம்...சீதனத்தை ஒழிப்போம் என்று சொல்கிறார்களேதவிர செயலில் காட்டியவர்கள் எத்தனைபேர்...? மேடைகளிலே தொண்டைகிழியக் கத்தியவர்கள் இலட்சக்கணக்காய் வாங்கித்தான் செய்கிறார்கள்...ஏன் கனக்கவேண்டாம் உன் பக்கத்துவீட்டு சண்முகம் என்ன ஆனார்...? மேடைபோட்டுப்பேசியவர் சீதனம் என்பது பேய்..அது சமுதாயக் கொல்லியென்று சொல்லித்திரிந்தவர்..கடைசியில் ஒருபாப்புக் காணிக்காக தன்னுடைய கல்யாணத்தை நிறுத்துமளவுக்குப்போனார்...அவரே எக்கச் சக்கமாய் வாங்கித்தானே செய்தவர்.''
–படபடவென ஜானியும் பேசித்தள்ளினான்.
''ஜானி கொஞ்சம்பொறு...உன் நிதானத்தை இழக்காதே...உன் பழைய பக்கங்களை கொஞ்சம் புரட்டிப்பார்...நீயும் அந்தக்காலத்தில் பேசித்

## ஏமாற்றிய அவளுக்கு!

நினைவின் கற்பப்பையில் நீ
கருக்கட்டியதால்
நித்தமும் வேதனையில்
துடிக்கிறேன்
என்
இரத்த அணுக்களில்
உறைந்து கிடந்தவளே
என் கண்ணீரை சுமந்துவந்த
ஈரத்தென்றல்
அன்று உன் வீட்டு
யன்னலை முத்தமிட்டதில்லையா?
மழைக் காற்று சருகை
முத்தமிடவில்லையா
புழுதி புயலைக்
காதலிக்கவில்லையா?
அதேபோல்தான் பூக்களுக்கும்
பூகம்பம்மேல் காதல்
வந்திருக்கும்
கண்ணீருக்கு நிறமில்லை
என்பதால்தானே
குருதியிலே காவியம்வரைந்தேன்
உன் இதயத்தில் கசிகின்ற
இரத்தத்துளிகளை
இரவலாகத் தா
இறுதியாக அவற்றுடன் வாழ
நான் பழகிக்கொள்கிறேன்...
நீ கைமாறி போனதனால்
உன் நிழலைத் தேடி
நான்
சிறகு உதிர்ந்த பறவையாக
இன்று தனிமை வானில்
அழுகின்றேன்
ஏன் இந்த ஏமாற்றம்?

–பீற்றர் குலம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரிந்தவன்தான்...அடிக்கடி ஆடைகளைமாத்திறதைப்போல மனசுகளையும் மாத்திறீங்களே...சண்முகம் வாங்கியவர் சந்தானம் வாங்கியவர் என்ற கதை இங்கை தேவையில்லை...முதலில் நீ உன்னை யோசி...மற்றவர்களை யோசியாதை...மனிதனுடைய நிலமைகளில் அவனது முன்னேற்றத்தில் வளர்ச்சியடையத்தான் வேண்டும்...நான் மறுக்கேல்லை...ஆனால் இண்டைக்கு நாங்கள் எம் மனசுகளில் எவ்வளவோ பின்தங்கியநிலைமையில் இருக்கிறோம்.. இண்டைக்கு நாங்கள் எங்கடை தேவைகளைத்தான் பெருக்கிக்கொண்டு போகிறோமேதவிர எம் மனசுகளில் மாற்றமில்லை..மற்றவர்கள் சீதனம் வாங்குகிறார்கள் நானும் வாங்கவேண்டுமென்று நீ நினைக்காதை... அவர்களிடமிருந்து வித்தியாசமாய் இருக்கப்பழகிக்கொள்...நீ சொல்லுக்கும் செயலுக்கும் மாறுபட்டவனாக இருக்கக்கூடாது...வாழ்க்கை என்பது இருநாடுகளுக்கிடையே ஏற்படும் வியாபார ஒப்பந்தம் அல்ல... மாறாக இரு மனசுகள் ஒன்றுசேர்ந்து தங்கள் உறவை நிர்ணயித்துக் கொள்வதுதான் வாழ்க்கையாகும்...இதற்கு அன்பைத்தவிர வரையறையோ விலையோ கிடையாது.அதனால்தான் சொல்கிறன் சீதனம்கேட்டு ஒரு பெண்ணின் அபிலாஷைகளைச் சிதைத்துவிடாதே!...எல்லாம் அறிந்த நீ மாறுவதுதான் எனக்குப்புரியவில்லை...என்னவோ உன்னோடு நாலைஞ்சு வருஷமாய்ப்பழகிட்டன்...எதுவோ வாழப்போறது நீதான்...நல்லாய் யோசித்து ஒரு முடிவை எடு...இப்ப உனக்கு மூட் சரியில்லை...நான் கடைக்குப்போட்டு வாறன்.''

–கண்ணன் விடைபெற்றுக்கொண்டான்.

நண்பன் சென்றதும் மறுபடி சிந்தனையில் மூழ்கினான் ஜானி.

ஜானி!–

சாதாரண குடும்பத்தைச்சேர்ந்தவன்.

வசதியானவர்கள் என்று சொல்லுமளவுக்கு இல்லை.

குடும்பத்தில் ஐந்துபேர்..ஒரு அண்ணன்..அடுத்தவள் சாருமதி...

இளையவன் ஜானி...இவன் பிறந்தவுடனேயே தாய் தந்தயைப் பறிகொடுத்தான்...சுமைகள் அண்ணனின்தலையில் தங்கியது.இருவரையும் படிக்கவைக்கவேண்டுமென்று அல்லும் பகலும் கஷ்டப்பட்டார்...அவர் கஷ்டத்தைப்புரிந்துகொண்ட சாருமதியோ தன் படிப்பை நிறுத்திக்கொண்டாள். ஆனால் ஜானியை அந்தநிலைக்கு ஆளாக்காது பல்கலைக்கழகம்வரை படிக்கவைத்து அவனைப்பட்டதாரியாக்கிவிட்டு தனக்கும் துணையைத் தேடிக்கொண்டார்.பட்டம்பெற்ற ஜானியால் வேலை ஒன்றைத்தேடிக்கொள்ள முடியவில்லை..நாட்டில் பிரச்சனைகளும் தொடரவே ஜானியும் நாட்டைவிட்டு ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தான்..

ஜெர்மனி வந்து சேர்ந்தபிற்பாடுதான் நம்மவர்படும் அவலநிலைகளைக் கண்டுகொண்டான்...புதிய முகங்கள்..புதிய சூழல் எல்லாமே அவனுக்கு வியப்பைக்கொடுத்தன.

ஓரிரு வருடங்கள் கஷ்டப்பட்டான்...அந்தச்சூழ்நிலையில் கிடைத்தவன்தான் கண்ணன்...இருவரும் ஒரேவிடுதியில் தங்கியிருந்தனர்...அந்தவிடுதியில் பல பொய்முகங்களையும் சந்தித்துக்கொள்ளத்தவறவில்லை...எதற்குமே அலட்டிக்கொள்ளாமல் படிப்படியாக முன்னேறி இன்று கார் வீடு இப்படிப் பல வசதிகளோடு வாழ்கிறான்... ஐந்துவருடத்தைக் காலம் கொண்டுசென்றது...

www.tamilarangam.net

நல்ல இடத்திலிருந்து சம்பந்தம் வரவே அண்ணன் ஒரு கடிதத்தை எழுதிப்போட இவனோ இங்கு ஒரு தெளிவுமில்லாது முடிவுமில்லது தவிக்கிறான்.
மீண்டும் கடிதத்தைப் படிக்க எண்ணி அதனைப்பிரித்தான்.
அதற்குள்ளிருந்த அந்தப்பெண்ணின் படம் அவனைப்பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.
அவள் அழகாகவே இருந்தாள்.

*அன்புள்ள தம்பிக்கு!*
*நாம் நலம்.அதுபோல் உன் சுகம் அறிய ஆவல்.*
*நாட்டுப்பிரச்சனைகள்பற்றி என்ன எழுதுவது.எல்லாமே சீரழிந்துபோய் விட்டது.இப்போது பிரச்சனைகளே எமக்கு வழக்கமாகிப்போய்விட்டது.ஏதோ இன்றுவரை உயிருடன் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.*
*நிற்க!*
*நான் சாருமதிக்கு வரன் பார்த்துக்கொண்டிருக்கிறேன்...எல்லாம் சரிவந்தும் சரிவராமல் இருக்கிறது.எம்மிடம் வசதிகள் இருந்தால் மட்டும் போதாது. வாய்ப்புக்களும் அமையவேண்டும்.அவளுக்கு என்ன வயசா போய்விட்டது. அவளுக்கும் ஒரு வாழ்க்கை அமையும்தானே.நீ அவளைப்பற்றி யோசிக்க வேண்டாம்.நான் இங்கு பார்த்துக்கொள்கிறேன்.தற்போது உனக்கு ஒரு நல்ல இடத்திலிருந்து சம்பந்தம் வந்திருக்கு.*
*பண்பான குடும்பம்,படித்தவள்,அழகானவள், எல்லாவகையிலும் உனக்குப்பொருத்தமானவளும் கூட.எனக்குப்பிடித்துப்போயிற்று.*
*ஆனால் அவள் ஏழைக் குடும்பத்தைச்சேர்ந்தவள்.மற்றும் அவளிடம் எந்தக் குறையுமில்லை.பெண்ணின் பெயர் சாருண்யா.அவர்கள் சீதனம் தரமாட்டார்கள்.. தரக்கூடிய வசதியும் அவர்களிடம் இல்லை. தகப்பனார் ஒரு ஆசிரியர். இன்னும் இரண்டு பெண்கள்.கஷ்டம் என்று சொல்லமுடியாத அளவுக்கு அவர்கள் குடும்பம் இருக்கிறது.நீ இந்த வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொள்வதன்மூலம் நிறைவான சந்தோஷத்தை அடைவாய்.இத்தோடு பெண்ணின் படத்தையும் இணைத்திருக்கிறேன்.பார்த்து மிகவிரைவில் எனக்கு ஒரு நல்ல முடிவை எழுது.*

*இப்படிக்கு–*
*உன் அண்ணன்*
*ப.மதன்.*

கடிதத்தைப் படித்துமுடித்துவிட்டு சாருண்யாவின் படத்தை மீண்டும் பார்த்தான்...அவள் அழகு குறையவேயில்லை!...ஆனால் இவனோ இன்று பணம் என்னும் மாயையில் சூழ்ந்திருக்கிறான்...தன்னை இந்தநிலைமைக்கு ஆளாக்கிய அண்ணனையும் அவனால் வெறுக்க முடியவில்லை.சம்பந்தத்தையும் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.
ஒரு முடிவுக்கு வந்தவனாய் கடிதம் ஒன்றை எழுத ஆரம்பித்தான்...

*அன்புள்ள அண்ணா!*
*மற்றும் அண்ணி பிள்ளைகள் சாருமதி!*

யாவர்க்கும். நான் நலம்! நலம் நாடி நலம் கேட்கின்றேன்.
என்மீது நீங்கள் வைத்திருக்கும் அன்புக்கும்,அக்கறைக்கும் நன்றி.அதேவேளை
எனக்கு அதிவிரைவில் திருமண ஒழுங்கு செய்வதுதான் பிடிக்கவில்லை.
முதலில் தங்கச்சிக்குப் பாருங்கோ.பிறகு எனக்குப்பார்க்கலாம். எனக்கு
ஒன்றும் அவசரமில்லை.அப்படிச்செய்வதாக இருந்தாலும் உந்தத்திருமணத்தில்
எனக்கு இஷ்டமில்லை.போயும் ஒரு ஏழைப்பெண்ணை என்தலையில் கட்டிவிடப்
பார்க்கிறீர்களே! நாளைக்கு நான் கஷ்டப்படுகிறபோது யார்வந்து
பார்க்கப்போகிறார்கள்?அண்ணா!இந்தக்காலத்தில் பணத்தை வைத்துத்தான்
மனிதனுடைய தராதரத்தை எங்களுடைய சமுதாயம் அளவிடுகின்றது.
எனவேதான் எனக்குப் பணம் அவசியப்படுகின்றது.நீங்கள் சீதனமில்லாமல்
செய்தீங்கள்.அது உங்கள் மனநிலையும் அந்தச்சூழ்நிலையும் வேறை.ஆனால்
நான் அப்படி இருக்கமுடியாது.வசதியாக வாழ்ந்திட்டன்.வசதியாக
வாழவேண்டும்.இனி என்னால் பழமைக்குப் போகமுடியாது.மீண்டும் நான்
கஷ்டப்படத் தயாராக இல்லை.எது எப்படியோ முதலில் சாருமதிக்கு
ஒரு வரனைப்பாருங்கள்.
வேறுவிடயமில்லை.

இப்படிக்கு
அன்புடன் தம்பி
ப.ஞானி.

கடிதத்தை அன்றே அனுப்பிவிட்டு ..மீண்டும் படுக்கையில்விழுந்தான்..
அண்ணனுக்கு அப்படி எழுதியிருக்கக்கூடாது என அவன் மனம்
நினைக்கலாயிற்று.
ஆனால் எழுதிவிட்டான்.

மூன்று கிழமைகள் சென்றன.மீண்டும் ஓர் கடிதம்.
அண்ணனின் கடிதம்..பயத்துடனேயே கடிதத்தை உடைத்தான்.

அன்புள்ள தம்பிக்கு!
நீ படித்து பட்டம் வாங்கியவன்...
பெரிய அந்தஸ்து பணம் இப்படிப் பல வசதிகளோடு உன்னை வகுத்துக்
கொண்டுவிட்டாய்.நீ வெளி உலகுக்கு பகட்டாக வாழவேண்டுமென்றுதான்
நினைக்கிறாய்..ஆனால் உன் அகத்தையும் கொஞ்சம் திறந்துகொள்.நாமும்
கஷ்டப்பட்டுத்தான் முன்னுக்கு வந்தவர்கள்..இந்த நிரந்தரமில்லாத
உலகத்தில் எது நிரந்தரமென்று உன்னால் நிரூபித்துக்கொள்ள முடியுமா?
முடியாது! இருக்கின்றவரையில் மனிதனாக வாழப்பழகிக்கொள்ளவேண்டும்.
நீ கல்யாணத்தில் இஷ்டமில்லை என்றால்கூட நான் ஏற்றுக்கொண்டிருப்பேன்.
ஆனால்,நீ பணத்தைவைத்து மறுத்ததுதான் மன வேதனையைத்
தந்தது.படித்தவன்கூட சிலசமயங்களில் பாதை மாறித்தான்
போகிறான்.உன் மனதில் இலட்சியங்களைத்தான் வளர்த்திருப்பாய் என
நினைத்தேன்..ஆனால் நீயோ இலட்சங்களையல்லவா கேட்கிறாய்! அதற்காக
வாழ்க்கைக்குப் பணமே தேவையில்லை என்று சொல்லவில்லை.தேவைதான்
ஆனால் இருக்கின்ற வசதிகள் அதிகமாக இருந்தால் இல்லாதவர்களுக்குக்

www.tamilarangam.net

கொடுப்பதுதான் மனித தர்மம்.
வெளிநாடு என்றுபோன பலரை பலவிதத்தில் மாற்றியமைத்துவிட்டது என்பதற்கு நீயும் விதிவிலக்கானவனல்ல.நீ படித்தது உன் பணத்தை அந்தஸ்தை உயர்த்த அல்ல.அறிவிற்கு வேலைகொடு..அடுத்தவர் துன்பத்தில் பங்குகொள்.கடந்துபோன ஒரு சம்பவம் எங்கள் ஊர்ப்பள்ளியில் நடந்தது. உனக்கு ஞாபகம் இருக்குமோ தெரியாது.ஆனால் இந்தச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக்காட்ட வேண்டும்போலிருக்கிறது.அதாவது எங்கள் பாடசாலையில் கலைவிழாவின்போது-சீதனம் வாங்குவது சரியா தவறா என்ற விவாத அரங்கிலே நீ தப்பு என்ற பக்கத்தில் நின்று பேசியபோது மண்டபம் நிறைந்த மாணவ மாணவிகளில் ஒருத்தி, ''இதுவே உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டால் செய்வீர்களா?''என்று கேட்டபோது நீயோ ''நிச்சயமாக ஏற்றுக்கொள்வேன்..சீதனமில்லாமல் ஒரு ஏழைப் பெண்ணைத்தான் திருமணம்செய்துகொள்வேன்.''என்றபோது மண்டபம் நிறைந்த கரகோஷத்தைப் பெற்ற ஜானியா இந்தநிலைக்கு ஆளாகிவிட்டான் என்று நினைக்கிறபோது கவலை நிறைந்த ஆச்சரியத்தைத்தந்தது.
தம்பி!இன்னுமொன்று உனக்கு ஞாபகம் இருக்கா?அன்று அந்த மண்டபத்தில் துணிந்து கேள்வி கேட்ட அந்தப்பெண்...இதே சாருமதிதான் அவள்.
நீ அன்றுசொன்ன வார்த்தைகள் எங்கே?
எல்லாவற்றையும் நீ மறந்துவிட்டாய். பழமைகளை மறந்து புதியகோணத்தில் வாழ்கின்றபோது பழையவைகளை நினைப்பதற்கு கஷ்டமாகத்தான் இருக்கும்.பணம் பணம் பணம் நீ படித்து வாங்கிய பட்டமா?நீ இன்னும் பண்பில் பகுத்தறிவில் பட்டம் பெறவேண்டும். அவைகளை எப்போது பெற்றுக்கொள்ளப்போகிறாய்?
சாருமதியைப்பார்.எம்மிடம் எல்லா வசதிகள் இருந்தும் ஒரு வரன் வந்து அமையவில்லையே.உன் பணத்தால் என்ன செய்ய முடிந்தது?...
பணம் மட்டும் இருந்தால் போதாது.வாய்ப்புக்களும் வரவேண்டும்.அப்படி வருகின்றபோது அதைப்பயன்படுத்திக்கொள்ளத் தெளிவான மனம்வேண்டும். வசதிகள் இருக்கின்றது என்பதால் மட்டும் நாம் சில வரையறைகளை மீறிவிடக்கூடாது.இன்று உன்தங்கை வசதிகளோடு வாழ்கிறாள்..ஆனால் அவளைப்போன்ற எத்தனையோ ஏழைப்பெண்கள் சீதனம் என்னும் கொடுமையினால் வாழ்வின் வசந்தங்களை இழந்து இருண்டவாழ்க்கைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றனர்.எங்கள் சமுதாயத்தில் பெண்குழந்தை பிறந்துவிட்டால்
அவளை வேண்டாப்பொருளாகவே கருதுகிறார்கள்..அவள் வளர்ந்து வாழ நினைக்கின்றபோது சீதனம் தலை தூக்குகின்றது.மொத்தமாகவே பெரும் சுமைகளாக பெற்றோர்களுக்குத்தெரிகின்றது.எங்களுடைய சமுதாய அமைப்பில் இதை உங்களைப்போன்ற இளைய சமுதாயம் நின்று வேடிக்கை பார்க்கின்றது.வரதட்சிணை,ஜாதிவெறி,பணவெறிகொண்டு மூடக்கொள்கைகளால் மூழ்கிப்போயிருக்கும் எம் அமைப்பில் இந்த சமுதாயச் சீரல்களை மாற்றியமைக்கும் எண்ணம் ஒருவனுக்காவது வரக்கூடாதா? அப்படி வருகின்றபோதுதான் எமது சமுதாயம் உருப்படும்.
ஒரு வளர்ச்சியடைந்தநாட்டில் நீ இருந்தும்கூட உன் மனதினில்

www.tamilarangam.net

வாட்சிதான் இருக்கின்றது.நீ இருக்கும் நாட்டைப்பார்.சீதனம் என்ற பேச்சுக்கே இடமில்லை...அவர்களின் வாழ்க்கைமுறைகள் வேறாக இருக்கலாம் ஆனால் அவர்கள் அங்கே ஒடுக்கப்படவில்லையே.சம உரிமை உள்ளவர்களாகத்தானே வாழ்கிறார்கள்.
தம்பி!நீ எப்போதும் கொடுப்பதற்கு நினை...கையேந்த நினைக்காதே! உன்னை விலைபேசாதே.பணத்தால் எப்போதுமே நல்ல வாழ்வுமலராது... சஞ்சலமே அடையும். நல்ல குணத்தால்,எண்ணத்தால்தான் நல்ல வாழ்வு மலரும்.எப்போது நான் என்கின்ற எண்ணத்தை நீ கைவிட்டு நாங்கள் என்ற மனப்பாங்கு எப்போது வருகின்றதோ அப்போதைக்கு நீ பதில்போடு.

அதுவரையில்–
பிரிவில் உன் அண்ணன்.

கடிதத்தைப் படித்து முடித்துவிட்ட ஜானிக்கு அவனையறியாமலேயே கண்ணீர் பெருக்கெடுத்தது.
தான் கொண்ட எண்ணங்களை நினைத்து வெட்கப்பட்டான்...
என்ன மடமை...! நாட்டில் இருக்கப் பயந்து ஓடிவந்தகோழைநான்...
இங்கு அகதியாய் அவதிகொண்டுவாழவேண்டியிருக்கு.
அங்கே நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உயிரை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அவர்கள் எங்கே...நான் எங்கே..!
சமுதாயத்துக்கு நான் என்னசெய்தேன்...
கடைசி ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பதன் மூலமாகவாவது எனக்கு நிம்மதிவரட்டும்.
தன் மனதைத்தெளிவாக்கிய அண்ணனுக்கு நன்றியோடு ஒரு கடிதத்தை எழுதியதோடு...சாருண்யாவை ஏற்றுக்கொள்கிறேன் என்று அழுத்தமாய்க் குறிப்பிட்ட அந்தப்பதிலை அண்ணனுக்கு அனுப்பிவிட்டு நிறைவான மனத்தோடு..புதிய சிந்தனைகளோடு,புதிய மனிதனாக தன் நண்பனின் அறையைநோக்கி நடக்கிறான்.

## பூச்சூடக்காத்திருந்தாள்!

பூக்களின் வண்ணம்காட்டும் பூவையவள்
பொழுதெல்லாம் விழித்திருந்தாள்
பூச்சூடக் காத்திருந்தாள்
காதல்மொழிபேசி கனடா சென்றுவிட்ட
காதலன் வரவை எண்ணி
காரிகையும் பார்த்திருந்தாள்
கனடாவின் கரன்சியிலே
காதலன் விலைபோன செய்தி
காலங்கடத்துவந்து–அவள்
காதோரம் ஒலிக்கையிலே
கலங்கவில்லை கன்னியவள்
கையிலே துப்பாக்கி ஏந்தி
நெஞ்சிலே நெருப்பு ஏந்தி
நேராகச் செல்கின்றாள்
போராடச் செல்கின்றாள்



–இ.சம்பந்தன்,

www.tamilarangam.net

# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி
நடாத்தும்-
சிறுகதை கட்டுரை கவிதைப்போட்டிகள்:

1. சிறுகதைகள்:
(அ) மேலைநாடுகளில் வாழ்கின்ற தமிழ்ச் சமூகத்தினரின் மன உணர்வுகளைப் பிரதிபலிப்பனவாக,
அல்லது-
(ஆ) மேலைத்தேச-கீழைத்தேசக் கலாச்சார ஒப்பீட்டுப்பின்னணியைக் கருவாகக்கொண்டனவாக அமையலாம்.
சிறுகதை பூவரசு இனிய தமிழேட்டில் ஆறுபக்கங்களுக்குள் அடங்கத்தக்கதாய் இருத்தல் வேண்டும்.
சொந்தக்கற்பனையாகவும், இதுவரை பிரசுரமாகாததாகவும், மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இல்லாததாகவும் இருத்தல்வேண்டும்.

2. கவிதைகள்:
(அ) "மண்மீட்க வா என் மனமே"
(ஆ) "என் இனமே நான் சொல்லக்கேள்"
(இ) "சுதந்திரம் ஒன்றே சுகம்"
-இந்தத் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றில் கவிதைகள் வரையப்படலாம். பூவரசு இனியதமிழேட்டில் இரண்டு பக்கங்களுக்குள் அடங்கத்தக்கதாக கவிதைகள் அமையலாம்.

3. கட்டுரைகள்:
(அ) "நாங்கள் நடக்கும் பாதை"
(ஆ) "நமது சந்ததிகள்"
(இ) "நல்லதும் கெட்டதும்"
-இந்தத் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்யலாம். கட்டுரைகள் பூவரசு இனிய தமிழ் ஏட்டில் ஐந்து பக்கங்களுக்குள் அடங்கத் தக்கதாக அமையவேண்டும்.

போட்டிகளுக்கான பொது விதிகள்:

போட்டிகளில் பங்குபெறுவோர் பூவரசு இனிய தமிழ் ஏட்டின் நடுப்பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள பத்திரத்தை நிரப்பி அனுப்புதல்வேண்டும்.
விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெறாதவர் பூவரசு முகவரிக்கு எழுதி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
புனைபெயர்களில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப்பெயர்களையும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
பரிசுக்குரிய படைப்புக்களை நடுவர் குழுவொன்று தெரிவுசெய்யும்.
படைப்புக்கள் யாவும் நவம்பர் மாதம் 15ம் திகதிக்குமுன் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

முகவரி:

**Poovarasu**
**Sinniah Maheswaran**
**Neuwieder Str.32**
**2800 Bremen 41**
**Germany.**

இனிய தமிழ் ஏடு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நமது கலைஞர்.

எளிமையான தோற்றம்:இனிமையான சுபாவம்:நிதானமாய் அதேசமயம் எவர்மனத்தையும் மென்மையாய்த்தொடுகிற இதமான வார்த்தைப்பிரயோகம்:இவைகளெல்லம் நாட்டுக்கூத்து அண்ணாவியார் திரு ஜேசுதாசன் அவர்களின் இயல்பான அம்சங்கள். இவைகளுக்கெல்லாம் மேவாக அவரை உயர்த்திக்காட்டுகிற அவரது கலைத்திறமை....நாட்டுக்கூத்து,நாடகம், கவிதை,நடிப்பு,இசை என்று பல்வேறு வடிவங்களில் அவர்தன் கலைத்திறமையைக் காட்டிவருகிறார். அவரை பூவரசு தன் வாசகர்களுக்காகச் சந்திக்கிறது.

நாட்டுக்கூத்து அண்ணாவியார்
திரு ஜேசுதாசன்



***கலையுலகில் உங்கள் முதல் பிரவேசம் எது?***

பாடசாலையில் மூன்று கேள்விகள் என்ற நாடகத்தில் எனது ஏழுவயதில் நடித்தேன்.அதன்பின்பு தாவீது அரசன் நாட்டுக்கூத்தில் தாவீது அரசனாக பாடி நடித்தேன். இந்த நாடகத்தைப்பழக்கிய அண்ணாவியார் எனது தந்தையே. அப்போது எனக்கு எட்டுவயது.எனக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைத்தது.

***நாட்டுக்கூத்து என்னும் இந்தக்கலைவடிவத்தில் உங்களுக்கு நாட்டம் ஏற்படக்காரணம் என்ன?***



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அரச பாத்திரமேற்று நடிப்பவர். அவருக்கு இணை அவர்தான்.சிறப்பாகப் பாடுவார் நடிப்பார்.எனக்கு இதில் ஆர்வம் ஏற்படக் காரணம் என் தந்தையார் என்றுகூடச் சொல்லலாம். ஒருநாடகம் மேடையேறுமுன் பத்து அல்லது பதினைந்து தடவைகளாவது ஒத்திகை பார்ப்பார்கள்.ஒவ்வொருமுறையும் நான் பார்க்கத்தவறுவதில்லை. நாட்டுக்கூத்தில் இப்படித்தான் நாட்டம் ஏற்பட்டிருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

***இதுவரையில் தாங்கள் எத்தனை நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளைத் தயாரித்திருக்கிறீர்கள் அல்லது பங்குகொண்டிருக்கிறீர்கள்?***

எத்தனை நாட்டுக்கூத்து நடித்திருக்கிறீர்கள் என்றுகேட்டால் பதில் சொல்லமுடியும். நான் முதல்முறையாக இயக்கி மேடையேற்றியது அதுவும் ஜேர்மனியில் குன்றில் எழுந்த குரல் தான்.நாட்டுக்கூத்து ராகதாளங்கள் எனக்கு நன்கு தெரிந்திருந்தாலும் அதைப்பழக்கி மேடையேற்றும் தகுதி எனக்கு இருந்ததில்லை. அந்தத் தகுதியை எனக்குக் கொடுத்தவர் அருட் தந்தை ஜெயசேகரம் அடிகள்தான். உதாரணமாக ஒரு நாட்டுக்கூத்தையாவது பயிற்றுவித்து பாடவைத்து நடிக்கவைத்து அதுவும் மேடையேறினால்தான் அண்ணாவியார் என்ற பட்டத்துக்கு தகுதியுள்ளவர்.அதையே நான் இங்குதான் பெற்றேன். கிட்டத்தட்ட 30க்கு மேற்பட்ட நாட்டுக்கூத்துக்களில் பாடி நடித்திருக்கிறேன்.

***தமது தாயகத்தில் நாட்டுக்கூத்துக்கலைஞர்களில் உங்களைக் கவர்ந்தவர்கள் யார்? ஏன்?***

குணசிங்கம்,அல்பிரட், பேக்மன், ஜெயராசா, செபஸ்தியாம்பிள்ளை (எனது சகோதரன்), சாமிநாதன், ராசாத்தம்பி, மனோகரன், வின்சன் டி போல் இவர்கள் பாடினால் கேட்டுக்கொண்டே இருக்கலாம்.இனிமையான சாரீரம். ஏற்றம் இறக்கம் இராகங்களை அழகுபடுத்தும் விதம் மிகவும் அற்புதமாக இருக்கும்.அந்தப்பாத்திரங்களாகவே மாறிவிடுவார்கள்.





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*நாட்டுக்கூத்து என்னும் இந்தக்கலைவடிவத்தின் தோற்றம் வளர்ச்சி இவைபற்றி ஓரளவு சொல்லமுடியுமா?*

நானோ சிறியவன்.இந்த அற்புதமான கலைவடிவத்தின் தோற்றத்தை என்னால் கூறமுடியுமா? வளர்ச்சியோ மிகவும் அபாரம்.எழுத்துக்கூட்டி வாசிக்கத்தெரியாதவர்களில் இருந்து எண்ணுதற்கரிய கல்விமான்கள் வரை இது ஊடுருவி வளர்ந்திருக்கிறது.கல்வியறிவு இல்லாதவர்களுக்குப் பாடலின் வரிகளைச் சொல்லிச் சொல்லிக்கொடுத்துத்தான் பாடவைப்பதை நான் நேரில்கண்டிருக்கிறேன்.அவருடைய இனிமையான குரல்வளத்தைப் பயன்படுத்தவே இவ்வழியைக் கையாள்கிறார்கள்.மேடையில் அப்ளாஸ் வாங்குவது பெரும்பாலும் இவர்கள்தான்.படித்தவர்களிடம் இக்கலை வாழ்கிறது என்பதைவிட மேற்சொன்னவர்களிடம் வளர்ந்திருக்கிறது என்றால் அதன் வளர்ச்சிபற்றி வேறென்ன சொல்லவேண்டும்.

*தெருக்கூத்துப்போன்ற நாடகவடிவங்களில் தற்போது நமது தாயகத்தில் வீதிநாடகங்கள் செய்யப்படுகின்றன. இவைபற்றி என்ன கருத்துச்சொல்ல விரும்புகிறீர்கள்?*

தெருக்கூத்து என்று நீங்கள் எதைக்குறிப்பிடுகிறீர்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.தெருக்கூத்து என்ற பெயர் இந்தியாவோடு சரி. நமது நாட்டில் நாட்டுக்கூத்துக்கள் புனிதர்களின் திருநாட்களில் ஆலயங்களிலும் சைவமதத் திருவிழாக்களிலும் மக்களை அடக்கக்கூடிய பரந்தவெளிகளிலும் தான் மேடையேறுகிறது.இதுமேடை நாடகம்.வீதி நாடகமல்ல.மக்கள் வீதியில் கூடினால் அந்த இடத்திலே பாடி நடிப்பார்கள்.இது வீதிநாடகம்தான்.ஆனால் நமது தாயகத்தில் கூத்துநடக்கிறது என்று அறிவித்தால் அந்த இடத்துக்கு மக்கள் வந்து கூடுவார்கள்.அதனால்தான் நமதுநாட்டிலே கலைஞர்கள் ஆரம்பகாலம் தொட்டே மதிக்கப்படுகிறார்கள்.இந்திய நாட்டிலே கலைஞர்களை மதிக்கத்தொடங்கியது சிலவருடங்களுக்கு முன்புதான். இதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்பது எனது எண்ணம்.

*நமது தாயகத்தில் பலமேடைகளைக்கண்டபின்ன நீங்கள் வெளிநாடுகளில் வாழ்கின்ற நம்மவர்கள் மத்தியில் நாட்டுக்கூத்துக்குப் புத்துயிர் கொடுத்திருக்கிறீர்கள்.அங்குள்ள இரசிகர்களுக்கும் இங்குள்ள இரசிகர்களுக்கும் இடையில் நாட்டுக்கூத்துக்கு எத்தகைய வரவேற்பை உணர்கிறீர்கள்?*

இது மிகவும் அருமையான கேள்வி.நமது நாட்டிலே நாட்டுக்கூத்தில் யார் யார் பாடுகிறார்கள் யார் மிருதங்கம் வாசிக்கிறார் யார் ஆர்மோனியம் வாசிக்கிறார் அண்ணாவியார் யார் என்று அறிந்தாலே நாடகம் எப்படி இருக்கும் என்று அங்குள்ள இரசிகர்களுக்குத்தெரியும்.அவர்களையும் அவர்களுடைய இரசனையையும் குறைத்து மதிப்பிட முடியாது.ஆனால், நாட்டுக் கூத்தென்றால் என்ன இதில் யார் யார் பங்கேற்கிறார்கள் என்று தெரியாமலே

www.tamilarangam.net

முன்ஸ்ரார் நகரில் குன்றில் எழுந்த குரல் நாட்டுக்கூத்தைப் பார்த்து இரசித்து தங்களை மறந்து நாடகத்துடன் ஒன்றிப்போனார்களே அதுமட்டுமல்ல அறிமுகத்தின்போது கலைஞர்களுக்கு அவர்கள் கொடுத்த வரவேற்பு மகத்தானது.அடுத்து நாட்டுக்கூத்தை எங்கு வைப்பீர்கள் என்று பாராதவர்கள் ஜெர்மனில் பல இடங்களில் என்னைக்கேட்கும் அளவுக்கு நாட்டுக்கூத்து இங்கும் நல்ல வரவேற்பைப் பெற்றுக்கொண்டுதானிருக்கிறது.

*வளர்கின்ற புதிய தலைமுறையினரிடையே நாட்டுக்கூத்துக்கு எத்தகைய அபிப்பிராயம் நிலவுகிறது?*

பார்த்து இரசிக்கும் தன்மை அவர்களிடம் உண்டு என்பதை நான் கண்டிருக்கிறேன்.நாட்டுக்கூத்தில் பங்கேற்று பாடி நடித்தால் என்ன என்ற ஆர்வம் அவர்களிடம் உண்டாகுமானால் வளரும் சந்ததியினரும் நாட்டுக்கூத்தை வளர்க்க வசதியாக இருக்கும்.நாட்டுக்கூத்துக்கு அவர்களிடமும் சிறந்த வரவேற்பும் மதிப்பும் உள்ளது.

*வட – கிழக்கு மாகாணங்களில் நடைபெறுகின்ற நாட்டுக்கூத்துக்கள் வடமோடி,தென்மோடி என்று இரு வடிவங்களைக்கொண்டிருக்கின்றன. இவைகளுக்கிடையே ஒற்றுமை வேற்றுமை என்ன?*

வடமோடி நாட்டுக்கூத்துக்கும் தென்மோடி நாட்டுக்கூத்துக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு.வடமோடிக் கூத்தில் பாத்திரத்தின் தன்மையை பாடியும் வசன மூலமாகவும் நடிப்பின் மூலமாகவும் வெளிப்படுத்துவார்கள். இதற்கு நூற்றுக்கும் மேற்பட்ட இராகங்கள் **உண்டு.** அன்றியும் கொச்சகம்,கவி,விருத்தம்,பரணி,அகவல்,காதல்,வெண்பா, கலித்துறை,கலிப்பா,வசனக்கவி,சந்தத விருத்தம்,தாழிசை, கலிகொச்சகம்,சந்ததத்தாழிசை,இன்னிசை,உலா,தேவாரம்.

தென்மோடிக்கூத்தில் ஒருசில இராகங்கள்தான் உண்டு.விருத்தங்களிலும் சிலதான் உள்ளது.ஆடி,ஆடிப்படிப்பார்.சிலசமயம் பிற்பாட்டுக்காரர் பாட மேடையில் நிற்பவர் ஆடுவர்.தென்மோடி நாடகங்கள் பலவற்றிற்கு நான் ஆர்மோனியம் வாசிக்கப்போயிருக்கிறேன்.தென்மோடியும் ஒரு அற்புதமான கலைதான்.அவர்கள் ஆடும் முறையைப் பார்த்தாலே அலாதியாக இருக்கும்.

*சிறுகதை,கவிதை, நாடகம் போன்று நாட்டுக்கூத்துக்களையும் எழுத்தாளர்கள் உருவாக்கமுடியுமா? அவ்வாறு எழுதுவதற்கு எத்தகைய அனுபவம் தேவைப்படும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?*

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை, நாட்டுக்கூத்து பாடல் அமைப்பதற்கு ஒரு அண்ணாவியார் அருகிலிருக்கவேண்டும்.காட்சிக்கும் பாத்திர

www.tamilarangam.net

அமைப்புக்குமான இராகமொன்றை அண்ணாவியார் இசைக்க அதற்கான வரிகளை பாடலாசிரியர் சொல்லலாம் எழுதலாம்.அந்தந்தக் கட்டங்களுக்கு உரிய இராகங்கள் போடப்படுவது மிகவும் முக்கியமானது.

*பெரும்பாலான கலைவடிவங்கள் அந்தந்தக் காலகட்டத்துக்கேற்ப பிரச்சாரச்சாதனங்களாகவே சமுதாயத்துக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றன.ஜெர்மனியில் நீங்கள் அரங்கேற்றியிருக்கும் குன்றில் எழுந்த குரல் நாட்டுக்கூத்திலும் பிரச்சாரவாடை பெரிதாய்த்தெரிகிறது என்றும் வேதாகமத்தில் வருகின்ற யோவான் பாத்திரம் அதிகளவு அரசியல் சாயம் பூசப்பட்டதால்தான் அவர் ஒரு முரடனைப்போல் சித்தரிக்கப் படுவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.இதுபற்றித் தாங்கள் என்ன சொல்லவிரும்புகிறீர்கள்?*

தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்கு என்ன கருத்தைக்கொடுக்க வேண்டுமோ அதையே கொடுப்பதற்காக அதற்கான கதைகளைத் தேடி எடுக்கிறோம். அதில் முக்கியமாக முன்நடந்த சம்பவங்களையும் இப்போது நடக்கும் சம்பவங்களையும் தொடர்புபடுத்தியிருக்கிறோமேயன்றி உதாரணமாக மோயீசன் இஸ்ரயேல் மக்களை பார்போனில் அடிமைத் தளையிலிருந்து விடுதலைபெற்றுக்கொடுக்க அவர் புரட்சிவாதியாக மாறவில்லையா? வழிவழியாக மோயீசன்,யுவானி,யேசு இவர்கள் மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கப் புறப்பட்டவர்கள்தான்.
சகோதரர் திருச்செல்வம் அவர்கள் பூவரசு இதழுக்கு மிகவும் வேதனையுடன் கடிதமொன்றை எழுதியிருந்தார்.அதை நானும் வாசித்தேன். ஒரு கத்தோலிக்கரான அவர் இந்தக் கேள்வியை எழுப்பியிருப்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.
வேதாகமம் யேசுவுடைய வாழ்க்கை வரலாறுதான்.யேசுவுடன் சம்பந்தப்பட்டவர்களைப்பற்றி அவ்வப்போது சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வேதாகமத்தில் யுவானியின் வாழ்க்கை வரலாறு இல்லை.
அவரவர்களுக்கென்று தனித்தனியான வரலாற்றுப்புத்தகங்கள் உள்ளது.
அதன்படி யுவானியார் ஒரு முரடன்.அவர் சாகும்வரை தனது கொள்கையை விட்டுக்கொடுத்தவரல்ல.
நாடகம் முடிவடைந்ததும் இருவர் நாடகம் சம்பந்தமாக உரையாடுகிறார்கள்.அதை உன்னிப்பாகக் கவனித்திருந்தால் சைவ மக்களென்ன அனைவருக்கும் தெட்டத்தெளிவாக அதனுடைய சாராம்சம் விளங்கியிருக்கும் என்பது அடியேனின் தாழ்மையான கருத்து.

அரசன் அரசியென்று அணுவிடையுமெண்ணாமல்
கருதியவர்கள் முகம் கடுகளவும் பாராமல்
வைது கடிந்தவர்கள் மனம் நோகக் குறைகூறி
செய்துவந்த தீங்கைத் தெரியவெளிப்படுத்தி...
( —சஞ்யுவானி அம்மானையிலிருந்து)

www.tamilarangam.net

*தெருக்கூத்து,நாட்டுக்கூத்து என்பன பண்டைய கலைவடிவங்கள் அவை பெரும்பாலும் காவியங்களையோ,புராணங்களையோ,சரித்திரங்களையோ மையக்கருத்தாகக்கொண்டு தயாரிக்கப்படுகின்றன.இன்றைய நிகழ்கால சம்பவங்களை இவைமறை காயாகப் பழைய கதைகளுக்குள் மறைத்துக் கூறாமல் வெளிப்படையாகவே நிகழ்காலத்தில் வாழ்கின்ற பாத்திரங்கள் மூலம் நாட்டுக்கூத்துவடிவத்தில் சொல்லிவரமுடியாதா?'*

அப்போது மக்களுக்கு காவியங்கள்,புராணங்கள்தான் விளங்கக்கூடியது. அதாவது தெரிந்த கதைகளை கூத்துமூலம் கேட்பது.இப்போது உள்ளவர்கள் படித்தவர்கள் சுலபமாக விளங்கிக்கொள்ளக் கூடியவர்கள் சரியான கருத்துக்களை பாடல்மூலம் வெளிக்காட்டினாலே போதுமானது. ஒரு சினிமாப்படத்தை எடுத்துக்கொண்டால் முதலில் யார் நடிகர் இரண்டாவது யார் இசையமைப்பாளர் மூன்றாவது யார் கதைவசனம் நான்காவது யார் டைரக்டர். இப்போதுள்ள மக்களின் இரசனைக்கு கடினமானவையென்று ஒன்றுமில்லை.தேவையான கருத்துக்களை புதியமுறையில் அமைத்து கூத்தாக மக்கள்முன் படைக்கலாம்.

***தாங்கள் சிறந்த ஒரு இசைக்கலைஞரும்கூட.வெளிநாடுவாழ்கின்ற இசைக்கலைஞர்கள்பற்றி என்னசொல்லவிரும்புகிறீர்கள்?'***

வெளிநாட்டில் மிகவும் திறமையான கலைஞர்கள் இருக்கிறார்கள். கர்நாடக இசையில் வெளிநாட்டில் பிரகாசித்த காலஞ்சென்ற திருமதி கலாநாயகி சூரிய குமாரிலிருந்து இன்னும் கானமழைபொழிந்துவரும் கிருபாமணி மகாலிங்கம் செல்வராஜா கர்நாடக இசையையும் உணர்ச்சிப் பாடல்களையும் பாடிவரும் தம்பி கண்ணன் இன்னும் பலகலைச்செல்வங்கள் வெளிநாட்டில் வாழ்கிறார்கள்.தொடர்ந்தும் இசைமழை பொழிந்துவருகிறார்கள். அத்தோடு வில்லிசைக்கலைஞர் நாச்சிமார்கோவிலடி இராஜன் வில்லிசைக் குழுவினர் இப்படிப்பல நட்சத்திரங்கள் ஜெர்மனியில் பிரகாசிக்கின்றனர். அண்டையநாடுகளிலும் கலைக்கும் கலைஞர்களுக்கும் குறைவே இல்லை.

*மேற்கு ஜெர்மனியில் தாங்கள் எங்கு என்னவிதமான பங்களிப்பைச் செய்துவருகிறீர்கள்?'*

அருட் தந்தை ஜெயசேகரத்தின் அஸ்திவாரத்தில் இயங்கும் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தில் இசைக்கலைகளுக்குப் பொறுப்பாளராகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கு ஜெர்மன் கலாச்சாரப்பிரிவின்கீழ் இயங்கும் தமிழீழம் இசைக்குழுவில் முக்கிய வாத்தியக்கலைஞராகவும் பாடகராகவும் தமிழீழம் வளர்பிறை இசைக்குழுவின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் என் கலைப்பயணம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

***இறுதிவினா பூவரசு பற்றியது.பூவரசுபற்றிய உங்கள் கருத்து***

www.tamilarangam.net

*என்ன?*

நீங்கள் கேட்காவிட்டாலும் இதற்கு நான் பதில்சொல்லவேண்டியவனாக இருக்கிறேன்.ஜேர்மனியில் எத்தனையோ புத்தகங்கள் முளைக்கின்ற மாதிரியே மடிந்து போகிறதை அறிந்திருக்கும்வேளையில் நல்ல கருத்துகளைத்தாங்கி உயர்ந்த நோக்கோடு செயல்படுகின்ற ஏடுகளில் பூவரசும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது எனக்கூறுவதில் நான் மிகுந்த சந்தோஷம் அடைகிறேன்.

* * *

கத்தோலிக்க தமிழ் பண்பாட்டுத்
திருமண திருப்பலி.

கருணைக்கடலாம் கடவுளை வணங்கி அன்புவழி நடக்க மக்கள் தாம் கைக்கொண்ட மார்க்கமே ஒவ்வொரு சமயமாக மாறியது.கத்தோலிக்க திருச்சபை உலகம் பூராகவும் பரந்து விரிந்து இருந்தபோதும்,சமயத்தின் ஒரே தலைவர் பாப்பரசர் ஒருவரே.
கத்தோலிக்கம் மேல்நாட்டிலிருந்து கீழ்நாடுகளுக்குப் பரவியதால்,மேல்நாட்டு வழக்கத்திலுள்ள சில சடங்கு முறைகளும் கூடவே சென்றடைந்தன.
மேற்படியான சில சடங்குகள்,முறைகள் அந்த அந்த இனப்பண்பு,கலாச்சாரங்களுக்கு மாறுபட்டவையாக இருப்பதால் அடித்தள அறநெறி பிசகாமல் தங்கள் கலாச்சாரம் பண்புகளுக்கு ஏற்றபடி மாற்றம் செய்யலாம் என 1962 தொடக்கம் 1964 வரையான வத்திக்கான் பொதுச்சங்கத்தின் தீர்மானத்துக்கு ஏற்ப வண.ஜெயசேகரம் அடிகளார் 1992.05.29 வெள்ளிக்கிழமை மாலை மூன்றுமணிக்கு *வியோனிஸ்-ஜாக்குலின்* திருமணத்தை
**Gemeinde Zentrum, Liebfrauen Kirche Liebfrauen Weg 06, 4700 Hamm 1 ,West Germany**
என்னும் ஆலயமண்டபத்தில் இனிதே நிறைவேற்றிவைத்தார்.
இந்தத்திருமணத்திருப்பலிக்கு ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள்.அவர்களில் பலரும் குருவானவரையும் இந்த வகையில் திருமணத் திருப்பலிவைக்க இசைந்த மணமக்களையும் வாழ்த்திச்சென்றார்கள்.
இதில் ஒரு முக்கிய விசேஷம் என்னவென்றால், ஜேர்மன் நகரிலேயே இதுதான் தான் முதலாவதாக ஒப்புக்கொடுத்த பண்பாட்டுத் திருமணத் திருப்பலியாகும் என ஜெயசேகரம் அடிகளார் மகிழ்ச்சியுடன் கூறினார்.
—தகவல்:க.ஜோர்ஜ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூவரசு வாசகர் வட்டம்.

ஒரு சஞ்சிகையின் வளர்ச்சி என்பது–
வெளியீட்டாளர்களின் விடாமுயற்சியில்,அல்லது ஆக்கதாரர்களின்
தரமான படைப்புக்களில்மட்டுமே தங்கியிருப்பதில்லை.
அதன் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பவர்கள் வாசகர்களே!
ஒவ்வொரு சஞ்சிகையும் தத்தமக்கெனக்கொண்டுள்ள குறிக்கோள்களுக்கேற்ப
குறிப்பிட்டளவு வாசகர்களைத் தம்பக்கம் திரட்டிக்கொள்கின்றன.
தொடர்ந்தும் அந்த வாசகர்களைத் திருப்திப்படுத்தும் வகையில்
அவை வெளிவந்தால்மட்டுமே அவை தம் வளர்ச்சிப்போக்கில் ஒரு
உச்சக்கட்டத்தை எட்டமுடியும்.
மாறுபட்ட இரசனை உணர்வுள்ள வாசகர்களை எந்த ஒரு சஞ்சிகையும்
முழுமையாகத்திருப்திப்படுத்திவிட முடியாது.
இந்தநிலையில் பல்வேறுவகையான கருத்துக்களோடு சஞ்சிகைகள்
வெளிவருகின்றன.
அவைகளை வரவேற்கும் வாசகர்களின் ஆதரவு பெருகும் பட்சத்தில்
மட்டுமே அவை நின்று நிலைத்துப் பணியாற்றமுடியும்.
பூவரசு இனிய தமிழ் ஏடு இரண்டாவது இதழ் வெளிவந்தவையோடு
பூவரசு வாசகர்வட்டம் என்னும் ஒரு அமைப்புக்கும் அது வித்திட்டிருந்தது.
தனது வாசகர்களிடமிருந்தும் அது விண்ணப்பங்களைக்
கோரியிருந்தது.
குறிப்பிட்டளவு வாசகர்களே அப்போது விண்ணப்பித்திருந்தார்கள்.
''ஆறுதலாக இதுபற்றி யோசிக்கலாமே!''என்பதாக வேறு சிலவாசகர்கள்
கருத்துத்தெரிவித்திருந்தார்கள்.காரணம்–
பூவரசு இன்னும் எத்தனைகாலம் தொடரும் என்கின்றகேள்விக்கு
அவர்களுக்கு விடை தேவையாக இருந்தது.
''புலம்பெயர்ந்தோர் மத்தியில் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கும்போது
இதுபோன்ற இலக்கிய முயற்சிகள் அனாவசியமானவை!'' என்று சொன்னவர்கள்
சொல்பவர்கள் உண்டு.
''எதிர்காலத்தைத் திட்டமிடமுடியாத சூழ்நிலையில் நாங்கள்
இருந்தாலும்கூட நிகழ்காலக் கடமைகளிலிருந்து நாங்கள் விலகி
நிற்கமுடியாது''என்னும் உணர்வோடு நாங்கள் காரியமாற்றிக்கொண்டிருக்கிறோம்

www.tamilarangam.net

80 களில் நான் கையெழுத்துப்பிரதியாக சிலகவினங்களை எழுதி வெளியிட்டுக்கொண்டிருந்தபோது-
படைப்பாளிகளான ஒரு சில நண்பர்கள் -
''உங்கள் படைப்புக்களிடையே எங்கள் படைப்புக்களையும் வெளியிடலாமே!''
என்று கேட்டு எனக்கு எழுதினார்கள்.
எனது அப்போதைய சூழ்நிலை ஒரு சஞ்சிகையை ஆரம்பித்து நடத்தக்கூடியதாக இருக்கவில்லை.
ஒரு சஞ்சிகையை ஆரம்பித்தால் அது இடைநடுவில் நிறுத்தப்படாமல் தொடரப்படவேண்டும் என்று நான் கருதினேன்.
90 களில் பூவரசு பிறந்தது.
வளர்ந்த வளரும் கலை இலக்கிய ஆர்வலர்களுக்குக் களம் அமைத்துத் தரும்வகையில் அது தன் பணியைத்தொடர்கிறது.

---

புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துறையில் இது ஒரு பொற்காலம் என்று தோன்றுகிறது.
இப்போது மேலைநாடுகளில் பரந்தளவில் வெளியாகும் தமிழ் வார, மாத இதழ்களைப்பார்க்கும்போது மனம் மகிழ்ச்சியால் நிரம்பித் ததும்புகிறது.
எத்தனைதான் இன்னல்கள் வரினும்-
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று
முழங்கும் சங்குகளாய்-
நமது தமிழ் இதழ்கள்.
இவற்றைவரவேற்கும் வாசகர் கூட்டம்...

இந்த வாசகர் கூட்டத்திடையே-
பூவரசு சிறு குழந்தையே.
எனினும் அனைவரின் கரங்களையும் எட்டிப்பிடித்து,அவர்தம் நெஞ்சங்களைத் தொட்டுவிடத் துடிக்கும் குழந்தை.
விழி நிறையத்தமிழ்க்கனவுகளோடு-
உங்கள் மத்தியில் தளர்நடைபோட்டுவரும் குழந்தை.
அதனால்தான் அது-
பூவரசு வாசகர்வட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளது.

பூவரசு இனிய தமிழ் ஏடு-வாசகர்வட்டத்தின்மூலம்
மேலைநாடுகளில் வாழ்கின்ற அனைத்துக் கலை இலக்கிய ஆர்வலர்களையும் அணிதிரட்டும் பணி அத்தனை சுலபமான காரியமல்லத்தான்.
எனினும்,
வாசகர் வட்டம் என்னும் இந்த அமைப்பில் தற்போது பங்கு கொண்டுள்ள கலை,இலக்கிய ஆர்வலர்களை முன்னணியினராகக்கொண்டு-
சில செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தி-
தமிழ்க் கலை, இலக்கியத்துறைக்கும்,இத்துறைசார்ந்த கலைஞர்களுக்கும் கௌரவமளிக்க பூவரசு விரும்புகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூவரசு வாசகர் வட்டத்தின்
ஆரம்பத்திட்டங்கள்:

1.பூவரசு வாசகர் வட்டத்தின் அங்கத்தினர்களிடையே அனைத்து நகரங்களிலிருந்தும் பிரதிநிதிகளைத்தெரிவுசெய்து ஆலோசனைக்குழு ஒன்றினை அமைத்தல்.

2.தற்போது புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துறைக்குப் பணியாற்றிவரும் அனைத்து தமிழ் வார,மாத இதழ்கள்பற்றிய அறிமுகத்தொகுப்பு ஒன்றினை வெளியிடுதல்.

3.அனைத்துதமிழ் வார மாத இதழ்களிலும் வெளியாகும் படைப்புக்களில் தரமானவற்றை அரையாண்டு,ஓராண்டு என்னும் காலக்கணக்கில் வாசகர்வட்டத்தினூடாகத்தெரிவுசெய்து அவற்றுக்குப்பரிசு வழங்கிக் கௌரவித்தல்.

4.பூவரசு ஒவ்வோராண்டின் நிறைவின்போதும் அனைத்து தமிழ் வார மாத இதழ்களிலும் வெளிவந்த ஆக்கங்களில் தரமான ஆக்கங்களை வாசகர் வட்டத்தினூடாகத்தெரிவுசெய்து தொகுப்பாக வெளியிடுதல்.

5.சிறந்த ஆக்கதாரர், சிறந்த வாசகர்களைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்தல்.

6.நமது தாயகத்தில் வாழும் கலை இலக்கிய ஆர்வலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்தம் இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.

பூவரசு வாசகர்வட்டம் முன்னெடுக்கும் முதல் முயற்சிகள் இவையே. வாசகர்களின் கருத்துக்கள் தொடர்ந்தும் பெறப்பட்டு செயற்திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

(பூவரசு வாசகர் வட்டத்தில் அங்கத்துவம்பெற்றுள்ள வாசகர்பற்றிய விபரங்கள் அடங்கிய சிறு கையேடு இந்த இதழுடன் வெளியிடப்பட்டுள்ளது. சிறுகையேட்டின் பிரதிகள் அங்கத்தவர்களுக்கு மட்டும் விநியோகிக்கப்பட்டுள்ளது.)

இந்துமகேஷ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(சென்ற இதழ் தொடர்ச்சி)

பயிற்சி 11:-

வயிற்றுத் தசைப் பகுதிக்குரிய பயிற்சி.
படத்தில்காட்டியவாறு கால்களை 90யில் வைத்து வெளிச்சுவாச நிலையில் மேல் உடற்பகுதியையும் இருகைகளையும் நீட்டிய நிலையில் வலப்பக்கமாக,பின் நேர்நிலையில்,மீண்டும் இடப்பக்கமாக திருப்பி பயிற்சி செய்யவும்.

பயிற்சி 12:-

கால்களைப்பழையநிலையில் வைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து இருந்துகொண்டு இடதுகையால் வலது முழங்காலை அழுத்திப் பிடித்துக்கொண்டு வலது முழங்காலை வயிற்றுப்பக்கமாகத்தூக்கவும்.
ஆறுதலாக உள்வெளிச்சுவாசம் செய்யவும்.இதேபோல் இடதுகாலையும் செய்யவும்.இப்பயிற்சியால் வயிறு,இடை பகுதி அசைவுறுகின்றது.

பயிற்சி 13:-

கால்களை $90^{\circ}$ யில் வைத்துக்கொண்டு ஒரு தலையணையில் நிமிர்ந்து படுத்துக்கொண்டு இரு கைகளையும் நீட்டியவாறு நிலத்தில் ஊன்றி உடலின் நடுப்பகுதியையும் ஒரு காலையும் நன்கு உயர்த்தவும்.

பயிற்சி 14:-

உயர்த்திய காலை தலைக்குத்தாக வைத்து உடற்பகுதியை நிலத்திலே மெதுவாகவைக்கவும்.பின் பழையநிலைக்குவந்து இதேபோல மற்றைய காலைச்செய்யவும்.

பயிற்சி 15:-

கால்களை நேராகவைத்து நிமிர்ந்து படுத்துக்கொண்டு, இரு கைகளையும் அகலவிரித்து நிலத்தில் ஊன்றிக்கொண்டு வலதுகாலை உயர்த்தி இடப்பக்கமாக நிலத்தில்வைக்கவும். இந்நிலையில் கைகளும் இடக்காலும் இருந்த இடத்திலேயே இருக்கவேண்டும்.
இப்பயிற்சியால் வயிறு,இடை, மேல்கால் பகுதிகள் அசைவுறுகிறது.

## இளந்தாய்மார்க்கு.....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயிற்சி 16:-

இரு முழங்கால்களையும் தலையணையில் வைத்துக் கைகளை முன்னே ஊன்றி வெளிச்சுவாசநிலையில் இடது முழங்காலை முன்னே தூக்கி முதுகுப்பகுதியை வளைத்து நாடியால் முழங்காலைத்தொடவும்.

பயிற்சி 17:-

உட்சுவாச நிலையில் இடதுகாலை பின்பக்கமாக முடிந்தளவு உயர்த்தவும்.இவ்வாறு வலது காலையும் செய்யவும்.

பயிற்சி 18:-

ஓர் தலையணையில் வயிற்றுப்பகுதியைவைத்து குப்புறப்படுத்துக் கொண்டு கைகளை மடித்து நாடியை கைகளின்மேல் வைத்துக்கொண்டு வலதுகாலை உயர்த்தி நிலைகுத்தாக வைக்கவும்.

பயிற்சி 19:-

பின்னர் காலைநீட்டி உயர்த்திவைத்திருந்து பழையநிலைக்கு வரவும்.இதேபோல இடதுகாலையும் செய்யவும்.பின்னர் இரண்டு கால்களை முடிந்தளவு இவ்வாறுசெய்யவும்.

பயிற்சி 20:-

தலையணையில் வயிற்றுப்பகுதியைவைத்து குப்புறப்படுத்த நிலையில் இரண்டுகைகளையும் கழுத்தின் பின்பக்கத்தில்வைத்து முழங்கைகளை முதுகுப்பக்கமாக அசைக்கவும்.இப்பயிற்சியால் முதுகுப்புற தசைப் பகுதிகள் அசைவுறுகின்றன.இந்நிலையில் உட்சுவாசம் செய்யவும்.

பயிற்சி 21:-

பயிற்சி 20ல் கூறியதுபோலப் படுத்துக்கொண்டு கைகளை முன்னேநீட்டி மேல் உடற்பகுதியை உயர்த்தி கைகளை தோளுக்கு மேலே உயர்த்தி படத்தில் உள்ளதுபோலச்செய்யவும்.


பயிற்சி 22:-

நேராக நிமிர்ந்துபடுத்துக்கொண்டு கைகளால் இரண்டு முழங்கால்களையும் இறுகப்பிடித்து முதுகுப்பகுதியை வளைத்து கால்களை உயர்த்தி முழங்காலால் நெற்றியைத்தொடவும்.


மேலே தரப்பட்ட பயிற்சிகளை நாள்தோறும் செய்துவந்தால் உடல் பழையநிலையடைவதுடன் அழகுபெறுகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


12



13



14



15



16


17


18


19




21




தொகுப்பு: பத்மினி பரம்.

www.tamilarangam.net

# நாடுகளை நாமறிவோம்.

ஐரோப்பிய பொருளாதார சமூகம்.

1992 ம் ஆண்டு இறுதிமுதல் ஐரோப்பாவின் 12 நாடுகள் இணைந்து ஐரோப்பிய பொருளாதார சமூகம் எனும் புதிய அமைப்புவடிவில் செயற்படவுள்ளன.ஏற்கெனவே மேற்படி நாடுகள் பொதுவான சில கொள்கைகள் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட்டுவந்தபோதிலும் முழுமையான எல்லைகள் தளர்த்தப்பட்ட ஒருங்கிணைப்பு இவ்வாண்டுமுதலே இடம்பெறவுள்ளது.எனவே நாடுகளை நாமறிவோம் தொடரில் இம்முறை ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் அங்கம் வகிக்கும் 12 நாடுகளைப் பற்றிய சிறுகுறிப்புகள் இடம்பெறுகின்றன.ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் தற்போது அங்கம் வகிக்கும் நாடுகள்:

1.பெல்ஜியம்
2.டென்மார்க்
3.பிரான்ஸ்
4.ஜேர்மனி
5.கிறீஸ்
6.அயர்லாந்து
7.இத்தாலி
8.லக்சம்பேர்க்
9.நெதர்லாந்து
10.போர்த்துக்கல்
11.ஸ்பெயின்
12.பிரிட்டன்

1. பெல்ஜியம்

30,525 சதுர கிலோமீற்றர் பரப்பளவுகொண்ட நாடு இது.இங்கு சுமார் 9.9 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள்.ஐரோப்பாவின் சனநெருக்கடி மிகுந்த நாடுகளில் பெல்ஜியமும் ஒன்று. பிளெமிஷ்.பிரெஞ்சு.ஜெர்மனிய மொழிகளைப்பேசும் மக்கள் வாழும் இந்நாட்டின் தலைநகர் பிரசல்ஸ் ஆகும்.ரோமன் கத்தோலிக்க மதத்தைச்சார்ந்த மக்களை அதிகமாகக் கொண்ட இந்நாட்டின் தொழில்கள் உருக்கு,கண்ணாடி,இரசாயனப்பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்டவை.பல சர்வதேச நாடுகளுக்கு பிரதான வர்த்தக நிலையமாக பெல்ஜியம் விளங்குகிறது. நாட்டோ நாடுகளின் தலைமையகமும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் தலைமையகமும் இங்கு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

2. டென்மார்க்

43,080 சதுர கிலோமீற்றர் பரப்பளவுகொண்ட டென்மார்க்கில் 5,1 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள்.டனிஷ் மொழிபேசும் மக்கள் வாழும் இந்நாட்டின் தலைநகர் கோபென்ஹாவன் ஆகும்.எவங்கெலிக்கல் லுதெரன் மதத்தைச் சார்ந்த மக்கள் அதிகம் டென்மார்க் விவசாயப்பொருட்கள் பாற்பண்ணைப் பொருட்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட இறைச்சி என்பனவற்றை ஏற்றுமதி செய்கிறது.

3. பிரான்ஸ்

547,030 சதுரகிலோமீற்றர் பரப்பளவுகொண்ட இந்நாட்டின் சனத்தொகை 55.8 மில்லியனாகும்.பிரெஞ்சு மொழிபேசும் மக்களைக்கொண்ட இந்நாட்டில் ரோமன் கத்தோலிக்க மதத்தைச்சார்ந்தவர்கள் அதிகம்.பரீஸ் இந்நாட்டின் தலைநகர்.இந்நாட்டின் பிரதான ஏற்றுமதி உணவுப்பொருட்கள் தயாரிக்கப்பட்ட பொருட்கள் இராணுவத் தளபாடங்கள் ஆயுதங்கள் என்பனவாகும்.ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் உள்ள 5 நிரந்தர உறுப்பினர்களில் பிரான்சும் ஒன்றாகும்.95 பிரதேசங்களைக் கொண்ட பிரான்சில் ஜனாதிபதி ஆட்சிமுறை உள்ளது. மேலும் வெளிநாடுகளினும் பல பிரதேசங்களும் யூனியன் பிரதேசங்களும் பிரான்சில் ஆட்சிமுறைக்கு உட்பட்டவை.

4. ஜேர்மனி

1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முன்னாள் கிழக்கு ஜெர்மனியும்,மேற்கு ஜெர்மனியும் ஒன்றிணைந்ததை அடுத்து ஐரோப்பிய சமூகத்தில் ஒரு பலம்மிகுந்தநாடாக ஜெர்மனி விளங்குகிறது.357,243 சதுர கிலோமீற்றர் பரப்பளவுகொண்ட இந்நாட்டின் சனத்தொகை 78.7 மில்லியனாகும். புரொட்டெஸ்ரன்ற்,ரோமன் கத்தோலிக்க மதங்களைச்சார்ந்த மக்கள் ஜெர்மானிய மொழிபேசுகிறார்கள்.பாரிய இயந்திரங்களையும்,இராணுவத் தளபாடங்களையும் ஏற்றுமதிசெய்யும் உலகின் பிரதான நாடான ஜெர்மனி உருக்கு,இரசாயனப்பொருட்கள்,துணிவகைகள் என்பவற்றோடு பல மூலப்பொருட்களையும் ஏற்றுமதிசெய்கிறது.இணைந்த ஜெர்மனியின் தலைநகராக பேர்லின் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

5. கிரீஸ்

131,944 சதுர கிலோமீற்றர் பரப்பளவுகொண்ட இந்நாட்டின் சனத்தொகை 3.6மில்லியனாகும்.கிரேக்க மொழிபேசும் மக்களைக்கொண்ட இந்நாட்டில் கிரீக் ஓதொடொக்ஸ் மதத்தைச் சார்ந்தவர்கள் வாழ்கின்றனர்.இந்நாட்டின் தலைநகர் அதென்ஸ்.மூலப்பொருட்கள் எண்ணெய் உணவுப்பொருட்களை இறக்குமதிசெய்யும் கிரீஸ் விவசாய,கைத்தொழில் பொருட்களை ஏற்றுமதி செய்கிறது.கப்பற்துறைத்தொழில் இங்கு பிரதானமானதாகும்.

www.tamilarangam.net

6. அயர்லாந்து

70,282 சதுர கிலோமீற்றர் பாப்பளவைக்கொண்ட இந்நாட்டின் சனத்தொகை 3.6 மில்லியனாகும்.ரோமன் கத்தோலிக்க மதத்தைச்சார்ந்த மக்கள் வாழும் இந்நாட்டின் பிரதான மொழிகள் ஆங்கிலமும் கேலிக்குமாகும். டப்ளினைத்தலைநகராகக்கொண்ட இந்நாடு பிரிட்டனிடமிருந்து 1921ம் ஆண்டு சுதந்திரமடைந்தது. விவசாயப் பொருட்களையும்.மருந்துப் பொருட்களையும் துணிவகைகளையும் அயர்லாந்து ஏற்றுமதி செய்கிறது.

7. இத்தாலி

301,225 சதுர கிலோமீற்றர் பாப்பளவுள்ள இந்நாட்டின சனத்தொகை 57 மில்லியனாகும்.ரோமன் கத்தோலிக்க மதத்தைச்சார்ந்த இத்தாலிய மொழிபேசும் மக்கள் வாழும் இந்நாட்டின் தலைநகர் ரோம்.தயாரிக்கப்பட்ட பொருட்களையும் துணிவகைகளையும் ஏற்றுமதிசெய்யும் இத்தாலியில் உல்லாசப்பயணத்துறை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியபங்கு வகிக்கிறது.1946 ம் ஆண்டு குடியரசான இத்தாலி பாராளுமன்ற ஆட்சிமுறையைக்கொண்டது.

8. லக்சம்பேர்க்

2,586 சதுர கிலோமீற்றர் பாப்பளவுகொண்ட இந்நாட்டில் 3 இலட்சத்து 67 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர்.ரோமன் கத்தோலிக்க மதத்தைச்சேர்ந்த மக்கள் வாழும் இந்நாட்டில் பிரெஞ்சு,ஜெர்மனி,லெற்ஷேபேர்கிஷ் ஆகியமொழிகள் பேசப்படுகின்றன.லக்சம்பேர்க் தயாரிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது.கனிப்பொருட்கள்.உணவுப்பொருட்கள்.உலோகம், பாவனைப் பொருட்களை இறக்குமதிசெய்கின்றது.

9. நெதர்லாந்து

41,864 சதுர கிலோமீற்றர் பாப்பளவுள்ள இந்நாட்டின் சனத்தொகை 14 மில்லியனாகும்.ஆம்ஸ்ரடாமைத் தலைநகராகக்கொண்ட இந்நாட்டு மக்கள் கத்தோலிக்க புரொட்டஸ்ரன்ற் மதங்களைச்சார்ந்தவர்கள்.டச்சுப் பாஷை பேசும் மக்கள் அதிகம் வாழும் இந்நாடு தயாரிக்கப்பட்ட பொருட்களையும் இயற்கை வாயுவையும் ஏற்றுமதி செய்கிறது.ஐரோப்பிய பொருளாதா சமூகத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் நெதர்லாந்தும் ஒன்றாகும்.

10. போர்த்துக்கல்

88,880 சதுர கிலோமீற்றர் பாப்பளவுகொண்ட இந்நாட்டின் சனத்தொகை 10 மில்லியனாகும்.போர்த்துக்கீசப் பாஷைபேசும் மக்கள் வாழும் இந்நாட்டில் ரோமன் கத்தோலிக்க மதத்தைச்சார்ந்தவர்கள் வாழ்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லிஸ்போவைத் தலைநகராகக்கொண்ட இந்நாடு வைன் வகைகளையும் மாம், துணிவகைகளையும் ஏற்றுமதிசெய்கிறது. 1910 ம் ஆண்டு முதல் சுதந்திரக்குடியாசாக விளங்கும் போர்த்துக்கல் 1974 ம் ஆண்டு இடம்பெற்ற புரட்சிமூலம் 50 வருட சர்வாதிகார ஆட்சியை ஒழித்தது.

### 11. ஸ்பெயின்

504,783 சதுரகிலோமீற்றர் பரப்பளவுள்ள இந்நாடு 39 மில்லியன் மக்களைக்கொண்டது.கத்தோலிக்க மதத்தைச்சார்ந்த மக்கள் வாழும் இந்நாட்டில் கஸ்ரிலியன் ஸ்பானிய மொழிபேசப்படுகிறது.மற்றிட் இந்நாட்டின் தலைநகர் விவசாயப்பொருட்கள்ளையும் தயாரிக்கப்பட்ட பொருட்களையும் இந்நாடு ஏற்றுமதிசெய்கிறது.

### 12. பிரிட்டன்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அமைப்புரீதியாக இங்கிலாந்து.வேல்ஸ்.ஸ்கொட்லாண்டு, வடக்கு அயர்லாந்து ஆகிய 4 தனியான நாடுகளை ஒருங்கேகொண்டதாகும் 4 நாடுகளில் இருந்தும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக்கொண்டு பாராளுமன்றம் இயங்குகிறது. பொதுநலவமைப்பு நாடுகளின் அமைப்பு உருவாக பிரிட்டனே காரணமாகும்.ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையுள்ள 5 நாடுகளில் ஒன்றான பிரிட்டனின் தலைநகர் லண்டனாகும்.244,100 சதுர கிலோமீற்றர் பரப்பளவுகொண்ட பிரிட்டனின் சனத்தொகை ஏறத்தாழ 57 மில்லியனாகும்.

---

**படைப்பாளர்கள் கவனத்திற்கு!**

பூவரசுக்கு ஆக்கங்களை அனுப்பும்போது உங்கள் முழுப்பெயர்,முகவரி,இவைகளைக்குறிப்பிட்டு அனுப்புங்கள்.பூவரசுக்கென அனுப்பும் ஆக்கங்களை உடனடியாகப் பிரதிசெய்து வேறு பத்திரிகைகளுக்கு அனுப்புவதைத்தவிருங்கள்.பூவரசு உங்கள் ஆக்கங்களுக்கு ஆதரவு தரும் அதேசமயத்தில்,பூவரசைத்தரமானதாக்கும் வகையில் உங்கள் தரமான ஆக்கங்கள் மூலம் ஒத்துழைப்புத்தாருங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவெற்ரு இந்து மாமன்றம்
# ஏழாவது ஆண்டு நிறைவையொட்டி வழங்கும்
# சைவசமய அறிவுப்போட்டி வினுத்தாள்

1. அகத்தியரின் கமண்டலத்தை கவிழ்த்தவர் யார்?எவ்வுருவில் வந்தார்?
2. வடமாகாணத்தில் அமைந்துள்ள,சரித்திரப் புகழ்பெற்ற மிகப்பெரிய ஆலயமெது?
3. ''வாதவூரன்'' என அழைக்கப்பட்டவர் யார்?
4. நரகாசூரனை அழித்த தினமெது?
5. முருகன் பழத்திற்காக போட்டியிட்டு,சென்றமர்ந்த மலை எது?
6. மோதகத்திற்குள் மோதிரம் கிடைக்கப்பெற்ற சிறுமி யார்?
7. ஆலயத்தில் அங்கப்பிரதட்ஷிணை செய்யும்போது எந்தப்பக்கமாகச் செய்ய வேண்டும்?
8. ''திருமுருகாற்றுப்படை''யை அருளியவர் யார்?
9. திருநாவுக்கரசர் ''சூலைநோய்'' நீங்கி,பாடிய முதல் தேவாரமெது?
10. ''மாணிக்க கங்கை'' எந்த ஆலயத்திற்கண்மையில் பாய்கின்றது?
11. கோவிலில் செய்யத்தகாத சில செயல்கள் எவை?
12. பரமசிவன் யாருக்காக கூலி வேலை செய்தார்?கூலியாக என்ன பெற்ருர்?
13. வடபகுதியில் சைவத்தொண்டாற்றி பிரபலமடைந்த சிலரின் பெயர்களை எழுதுக?
14. சிவனுக்கு ''திருநீலகண்டன்'' எனப்பெயர் வரக்காரணம் யாது?
15. ''கந்தஷஷ்டி கவசம்'',''அபிராமி அந்தாதி'' அருளியோர் யாவர்?
16. திருப்புகழ், திருவிசைப்பா பாடியவர் யாவர்?
17. திருநீற்றுப்பதிகம் பாடியவர் யார்?கோளறு பதிகத்திலுள்ள பாடல்களெத்தனை?
18. நந்தி விலகி தரிசனம் பெற்றவர் யார்? சூடிக்கொடுத்த நாச்சியார் யார்?
19. ''திருப்பள்ளியெழுச்சி''யாரால்,எங்கு பாடப்பெற்றது?
20. ''சகலகலாவல்லி மாலை'' எத்தெய்வங்களின்மேல், யாரால் அருளப்பட்டது?
21. தெய்வங்களை வழிபடும் முறைகளைக்கூறும் நூல்களெவை?
22. ''பாலுந்தெளிதேனும்''--- என்று பாடியவர் யார்?பாடலை எழுதுக?
23. ''சதுரம்மறைதான் துதி செய்து''---எங்கு,எப்போது, யாரால் பாடப்பெற்றது? பாடலை முழுமையாக எழுதுக?
24. ''மண்ணுலகத்திலிற் பிறவி மாசற''தொடர்ந்தெழுதுக?
25. கோவில் தரிசனம் முடிந்தபின் யாரை, எப்படி வணங்க வேண்டும்?

www.tamilarangam.net



ஓ
அம்பாள் துணை

# சுவெற்ரு இந்து மாமன்றம் ஏழாவது ஆண்டு நிறைவையொட்டி வழங்கும் சைவசமய அறிவுப்போட்டி

வெளிநாடுகளில் வாழும் சைவசமய மக்களிடம் அருகிவரும் சமய அறிவை விருத்திசெய்யும் நன்நோக்குடன் நடத்தப்படும் சமய அறிவுப்போட்டியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

## போட்டி விதிகள்

1. 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளலாம். 10வயதிற்கும் 20வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   விடைப்பத்திரத்தில் பெயர்,விலாசம்,பிறந்த திகதி ஆகியன தெளிவாக குறிக்கப்படவேண்டும்.

2. போட்டிக்கான வினாக்கள் இப்பத்திரத்தின் மறுபக்கத்தில் உள்ளன.

3. விடைகள் யாவும் 30.09.92 (புதன்கிழமை)க்கு முன்பாக கீழே தரப்பட்ட முகவரிக்கு தபால்மூலமோ அல்லது நேரிலோ கிடைக்கும்படி செய்தல் வேண்டும்.

4. பரிசுபெறத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தபால்மூலம் அறிவிக்கப்படும். சுவெற்ரு இந்து மாமன்ற ஏழாவது ஆண்டு நிறைவு விழா 01.11.92 (ஞாயிறு) அன்று பரிசில்கள் வழங்கப்படும்.

5. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

### சைவசமய அறிவுப்போட்டிக்கான பரிசுகள்

முதலாவது பரிசு – தங்கப்பதக்கம்
இரண்டாவது பரிசு – தங்கப்பதக்கம்
மூன்ருவது பரிசு – தங்கப்பதக்கம்
4 முதல் 15 வரை – வெள்ளிப்பதக்கங்கள்(12)

ஆறுதல் பரிசுகள்:–போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்களில் தகுதியுடையவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்களுக்கு சைவசமய அறிவுப்புத்தகங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டிக்கான பரிசுகளுக்கு நிதியுதவி வழங்க விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள்:–

A.Nithianantham,
Husing Str – 2,
5840.Schwerte.
Tel.02304/15656

S.J.Sarma,
Schutzen Str –44,
5840.Schwerte.
Tel.02304/41753

A.Selvarajah,
Post Fach 1728,
5840.Schwerte.
Tel.02304/43808

*பி.கு :– சமய தீட்சை பெறவிரும்புவோர் ஆலய அர்ச்சகருடன் தொடர்பு கொள்ளவும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனத்தில் அழுகின்ற மனங்கள்

அத்தியாயம் 5.

அறைக்குள் நண்பர்களின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. விமலை நலம் விசாரிக்கவந்தவர்களும்,வேடிக்கைபார்க்கவந்தவர்களும், விசாரணைசெய்யவந்தவர்களும் என்று அனேகமாக அந்தக் காம்ப்பிலிருந்த எல்லா நண்பர்களுமே வந்துபோய்க்கொண்டிருந்தார்கள்.
எல்லோருக்கும் நடந்ததைச்சொல்லிச்சொல்லி விமலும் கிறிஸ்தோபரும் சலிப்படைந்துவிட்டார்கள்.உடலின் வேதனையைவிட மனதின் வேதனை அதிகமாக இருந்தது விமலுக்கு.
கிறிஸ்தோபர் சற்றுப்பலசாலியாக இருந்ததாலும்,அதிகமாக அவன் தாக்குதலுக்குள்ளாகாமல் சாதுரியமாகத் தப்பிக்கொண்டதாலும் அவன் ஓரளவு தெம்புடன் இருந்தான்.
''ஒரு விஷயம் மட்டும் எனக்கு நல்லா விளங்குது கிறிஸ்டி...நிறத்துவேஷம் என்கின்ற மனநோய் பழையபடி இந்த ஜெர்மானியரிடம் வளரத்தொடங்கி விட்டது...!''
''என்னாலை அப்பிடி நினைக்கமுடியேல்லை...சிலபேர் செய்கிற பிழையளுக்காக முழுச்சமுதாயத்தையுமே குறைசொல்கிறதிலை அர்த்தமில்லை...எங்களை அடிச்ச நாசிஸ்டுகள் எதுக்காக அதைச்செய்தாங்களோ....ஆனா,அப்ப எங்களைக் காப்பாத்தினதும் ஒரு ஜெர்மானியன்தான்...அதை நீ மறந்திட்டியா!''

''அலெக்ஸ்''என்று விமலின் உதடுகள் முணுமுணுத்துக்கொண்டன.
நேற்றிரவு அவன்மட்டும் தக்க சமயத்தில் உதவியிருக்காவிட்டால் நெடுநேரம்வரை நாங்கள் நடுறோட்டில்தான் கிடந்திருக்கவேண்டும்!
''இப்படி ஒரு நிலைமை உங்களுக்கு ஏற்பட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன்.. அனாவசியமாக மற்றவர்களுடைய விவகாரங்களில் தலையிடுவதை நாங்கள் விரும்புவதில்லை....ஆனால்,இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உதவி செய்யவேண்டிய கடமை எங்களுடையது என்பதையும் நான் அறிவேன்''
–ஆங்கிலத்தில் சரளமாகத்தன் மன உணர்வுகளை வெளிப்படுத்தினான் அலெக்ஸாந்தா.

இந்துமகேஷ்



www.tamilarangam.net

பொதுவாக ஜெர்மானியர்கள் தங்கள் தாய்மொழியிலேயே எவருடனும் உரையாட விரும்புகிறார்கள்...மிகவும் அரிதான சந்தர்ப்பத்தில்மட்டும் அவர்கள் ஆங்கிலத்தைப்பயன்படுத்துகிறார்கள்.
கிறிஸ்தோபரும் விமலும் ஜெர்மனிக்குப்புதியவர்கள் என்பதை அலெக்ஸாந்தா உணர்ந்துகொண்டிருந்தான்..அதனால் ஆங்கிலத்திலேயே கதைத்தான்.
''உங்களை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடவா'?'' என்று வினவினான் அலெக்ஸாந்தர.
''வேண்டாம்...வேண்டாம்...!'' என்று அவசரமாக மறுத்தான் விமல்.
''நாங்கள் எங்கள் விடுதிக்கே போய்விடுகிறோம்.!''
''ஓ.கே.!..நானே உங்களைக்காரில்கொண்டுபோய் சேர்த்துவிடுகிறேன்...என் காரில் ஏறுங்கள்...!'' என்று அருகே நின்ற ஒரு காரைக்காட்டினான் அலெக்ஸாந்தர்.
''நன்றி...நாங்கள் நிலக்கீழ் ரயிலிலேயே போய்விடுகிறோம்..!'' என்று நாகரீகமாக மறுத்தான் கிறிஸ்தோபர்.
''பரவாயில்லை...காரில் ஏறுங்கள்..!'' என்று கார்க்கதவைத்திறந்து வைத்துக்கொண்டிருந்தான் அலெக்ஸாந்தர.
இனியும் அவனது அழைப்பைத் தட்டிக்கழிப்பது சரியல்ல என்று நண்பர்கள் இருவரும் அலெக்ஸாந்தரவின் காரில் ஏறிக்கொண்டார்கள்.
''நீங்கள் இங்கேவந்து எவ்வளவு காலமாயிற்று'?'' என்றுகேட்டான் அலெக்ஸாந்தர.
''நான் வந்து ஒருமாதம்...இவர்வந்து ஒரு வாரம்தான்.''
''இப்போதெல்லாம் நிறைய இலங்கையர்கள் இங்குவந்து அடைக்கலம் கோருகிறார்கள்...உங்கள் நாட்டில் பிரச்சனைகள் பெருகிக்கொண்டிருக்கின்றன... அவ்வப்போது நானும் வானொலியில் கேட்பதுண்டு...சொந்த மண்ணில் நீங்களே உங்களுக்காகப் போராடவேண்டும்.''
''நாங்களும் போராடிக்கொண்டுதான் இருக்கிறோம்.'' என்றான் கிறிஸ்தோபர்.
''எங்கே ஜெர்மனியிலா'?'' என்றுகேட்டு மெள்ளமுறுவலித்தான் அலெக்ஸாந்தர.
விமல் மெதுவாகத் தலையைத்திருப்பி கிறிஸ்தோபரின் முகத்தைப் பார்த்தான்.விரக்திச்சிரிப்பொன்று வெளிப்பட்டது அவனிடமிருந்து.
''உங்கள் உரிமைக்காக நீங்கள் போராடுகிறீர்கள்...உங்கள் வார்த்தைகளில் சொல்வதானால் இழந்தமண்ணை மீட்பதற்காகப் போராடுகிறீர்கள்..இந்தப் போராட்டத்தை நீங்கள் வெளிநாடுகளிலிருந்து நடாத்தி வெற்றிபெற முடியாது...நீங்கள் வெளிநாடுகளுக்கு வருவது பணம்சம்பாதிக்கத்தான் என்று ஒரு பொதுவான அபிப்பிராயம் எங்கள் மக்களிடையே நிலவுகிறது... அது சரியான கருத்துத்தான் என்று நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்... உண்மையில் உங்களில் பெரும்பங்கினர் உயிரின் பாதுகாப்புக்கருதித்தான் இங்கு வருகிறீர்கள்...ஆனால் உங்கள் இனத்தில் எல்லோருமே உயிரின் பாதுகாப்புக்கருதி வெளியேறிவிட்டால் பிறகு உங்கள் மண்ணுக்காகப் போராடுவது யார்'?..இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா'?''
கிறிஸ்தோபரால் பதில்சொல்லமுடியவில்லை...
அலெக்ஸாந்தரவின் வார்த்தைகள் விமலின் சிந்தனையைக்கிளறிவிட்டதால் அவன் மௌனத்தில் இருந்தான்..
இந்த ஜெர்மானிய இளைஞன் அலெக்ஸாந்தர் உலகவிஷயங்களை நன்றாகவே கரைத்துக்குடித்திருக்கிறான் என்பது புரிந்தது.

www.tamilarangam.net

அலெக்ஸாந்தரவின் நிறம் மட்டுமல்ல மனமும் வெண்மைதான்போலும். அவனுக்கு இருபத்துநாலு அல்லது இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும்...ஜெர்மானிய ஆண்கள் பொதுவாக மீசைதாடி வளர்ப்பதில்லை... இவன் குறுந்தாடி வைத்திருந்தான்...முகத்தில் களங்கமில்லாத அமைதி தெரிந்தது...பேசும்போது சொற்களில் அழுத்தம் தெரிந்தது. அவன் காரோட்டும்போது அவனது கைகள் லாவகமாக இயங்கின. மின்சார ரயில்களிலும்,பஸ்களிலும் பயணம் செய்யும்போதெல்லாம் விமல் ஒருவிஷயத்தை அவதானித்திருக்கிறான்...அந்நியநாட்டவர்கள் எவராவது இருக்கைகளில் அமர்ந்திருந்தால் அந்த இருக்கைகளில் அவர்களுக்குப்பக்கத்தில் எந்தஜெர்மானிய ஆணோ,பெண்ணோ உட்காரத் தயங்குவார்கள்...முகத்தைச்சுழித்துப்பார்த்துக்கொண்டு வேறுபுறம் ஒதுங்கிக் கொள்வார்கள்....விமலுக்கு அவமானமாக இருக்கும்.
''நாங்களும் மனிதர்கள் என்பதை ஏன் இவர்கள் ஒப்புக்கொள்ளமறுக்கிறார்கள்'? ..எங்கள் தோலின் நிறம் இவர்கள் நிறத்தோடு ஒட்டிக்கொண்டுவிடும் என்று இவர்கள் அஞ்சுகிறார்களா..'?''என்று தனக்குள் குமுறுவான் அவன்..அதனால், இவன் பயணநேரங்களில் இருக்கையில் அமராமல் ஒருபுறமாய் நின்று கொண்டிருப்பான். ஒருதடவை கிறிஸ்தோபரோ இவனைக்கண்டித்தான்.
''அவர்கள் நம்மைப்புறக்கணிக்கிறார்களா இல்லையா என்பது நமக்குத் தெரியாது...நீ எதற்குக் கள்ளன்போல ஒருபக்கமாய் ஒதுங்கிக் கொண்டிருக்கிறாய்'?''
''எனக்கு அவர்களுடன் சமமாக உட்காரப்பிடிக்கவில்லை கிறிஸ்டி... அவர்களுடைய மனதின் அழுக்கு என்னையும் ஒட்டிக்கொண்டுவிடுமோ என்று எனக்குப்பயமாக இருக்கு!''

இப்போது அலெக்ஸாந்தரவின் காரில் அவனுக்குச்சமமாக உட்கார்ந்து போனபோது இந்த ஜெர்மானியர்களைப்பற்றி ஒட்டுமொத்தமாகக் கணக்குப் போட்டுக்கொள்வது நியாயமல்ல என்று தோன்றிற்று விமலுக்கு. எந்த இனத்திலாயினும்சரி சமுதாயத்திலாயினும்சரி நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கும்...நல்லதை எடுத்துக்கொண்டு கெட்டதை விலக்கிவிடவேண்டியதுதான்.! என்று நினைத்தான் அவன். காம்ப்பிற்குமுன்னால் அவர்களைக்கொண்டுவந்து விட்டுவிட்டு அலெக்ஸாந்தா விடைபெற்றுக்கொண்டான்.
''நீங்கள் செய்த இந்த உதவியை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம்'' என்றான் கிறிஸ்தோபர்.
''இது உதவியல்ல!''என்று சிரித்தான் அலெக்ஸாந்தா
''இது மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமை.''என்றவன்
''மறுபடியும் நான் உங்களைவந்து சந்திப்பேன்!''என்று விடைபெற்றுக்கொண்டான்

''அந்த அலெக்ஸாந்தரதான் உண்மையான ஜெர்மானியன்'' என்றான் விமல்.
''மற்றவர்களெல்லாம்'?'' என்றுவினவினான் கிறிஸ்தோபர்.
''அவர்கள் ஜெர்மனியின் பேரைக்கெடுக்கப்பிறந்தவர்கள்!''
''ஆக உனக்கு உதவிசெய்கிறவர்களெல்லாம் நல்லவர்கள்...மற்றவர்கள் எல்லாம் மனிதர்களே இல்லை...அப்படித்தானே'?''

www.tamilarangam.net

''நான் அப்படிச்சொல்லவில்லை...''என்றான் விமல்
''மனிதர்களை மனிதர்களாக மதிக்கத்தெரிந்தவன் எவனோ அவன்தான் முழு மனிதன் எண்டது என்ரை சித்தாந்தம்.''

அறைக்கதவு தட்டப்பட்டது.
மறுகணம் அது தானாகத்திறந்து கொண்டது.
இரண்டு புதிய முகங்கள்-தமிழ் முகங்கள்-உள்ளே நுழைந்தன.
அதைத்தொடர்ந்து பக்கத்து அறையில் இருக்கும் பழையமுகம் ஒன்று.
காலியாகக்கிடந்த பக்கத்துக்கட்டில்கள் இரண்டிற்கும் புதிய விருந்தாளிகள்...
''அங்கிள்...இதிலை ஒரு பெட்டிலை நீங்கள் இருக்கலாம்...அடுத்தபெட்டிலை இவர் இருக்கலாம்..!''என்று வந்த இருவருக்கும் படுக்கைக்களை ஒப்புவித்து விட்டு வெளியேறிற்று பழைய முகம்.

அங்கிள் ஒருமுறை அந்த அறையைப் பார்வையால் அலசினார்.
கிறிஸ்தோபரும்,விமலும் அவர்களருகே நின்றிருந்த நண்பர்களும் அவரது பார்வையில் விழுந்தார்கள்.
பெரியாஸ்பத்திரியில் புதிதாக அறிமுகமான நோயாளியைப்போல் அங்கிள் முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொண்டிருந்தார்.
உலகத்துத்துன்பங்களையெல்லாம் ஒட்டிக்கொண்டாற்போன்று வேதனையிலேயே விளைந்தமுகம் அவருக்கு.வயது ஐம்பதை நெருங்கிக்கொண்டிருக்கலாம்.
தலையில் பிடரியைத்தவிர மற்றப்பக்கங்களில் எல்லாம் மயிர் விடுதலை பெற்றிருந்தது.
கையிலிருந்த பயணப்பெட்டியைப் படுக்கையின்மீதுவைத்துவிட்டு கிறிஸ்தோபரின் அருகேபோனார் அங்கிள்.
''தம்பி இந்த அறையிலை யார் யாரெல்லாம் இருக்கிறியள்?''
''நானும் இவரும்தான்!''என்று படுக்கையில் கிடந்த விமலைக்காட்டினான் கிறிஸ்தோபர்.
''என்ரை றவலிங் பேக்கை இந்த அலுமாரிக்குள்ளை வைக்கிறன் என்ன..'' என்றார் அவர்.
''அதுக்கென்ன ...இது உங்கடை அறை!'' என்றான் கிறிஸ்தோபர்.
''ஜெர்மனி எண்டால் நான் ஏதோ பெரிசாய் நினைச்சன்...தம்பி! இங்கை இந்தக்கெதியாய்ப்போச்சுது...இங்கை சாப்பாடெல்லாம் எப்படி?''
''காலையிலை இரண்டு பணிஸ்...மத்தியானம் கொஞ்சம் இறைச்சியும் சூப்பும் ..பின்னேரம் பாண்..''
''இவ்வளவும்தானா?''
''ஏன் இடைக்கிடை பால் அப்பிள் ஒரேஞ்ச் எண்டு வேறை சாமான்களும் தருவாங்கள்.!''
''என்ன பாவம் செய்தனோ வசமாய் இங்கைவந்து மாட்டிக்கொண்டன்..!''என்றார் அங்கிள்.
''இங்கை வந்து இறங்கின உடனை எல்லாரும் இப்பிடித்தான் வருத்தப் படுவினம்...போகப்போகச்சரியாயிடும்!''என்றான் கிறிஸ்தோபர்.

அத்தியாயம்: ஆறு

தேவாலயத்திலிருந்து வெளிப்பட்டபோது—
மனம் கொஞ்சம் இலேசாகிவிட்டாற்போன்றிருந்தது...
கிறிஸ்தோபர் முன்னால் வந்து வெளிப்புறப்படிகளில் விமலுக்காகக் காத்துநின்றான்.
பிரார்த்தனை முடிந்து எல்லோரும் வெளியேறிக்கொண்டிருந்தார்கள்...
கடைசியாக விமல் வெளிப்பட்டான்.
''ஹலோ..!'' என்ற மென்குரல்.
விமல் திரும்பிப்பார்த்தான்...
புன்னகை தவழும் முகத்துடன் ஒரு ஜெர்மானிய நங்கை.
''ஹலோ ஹெல்லா..!''என்று அவளைநோக்கினான் கிறிஸ்தோபர்
மாலை வணக்கம்சொல்லி அவனது கையைப்பற்றிக் குலுக்கினாள் அவள்.
''இவன் என்னுடைய நண்பன் !''என்று விமலை அவளுக்கு அறிமுகப்படுத்தினான் கிறிஸ்தோபர்.
''ஹலோ!'' என்று அவள் விமலை நோக்கினாள்
அவளுடைய கையைப்பற்றிக்குலுக்கியபோது விமலின் கண்கள் அவள் முகத்தில் ஒரு ஆர்வத்துடன் விழுந்தன...இன்னதென்று புரியாத ஒரு புத்துணர்வு மனதில் நிறைந்தாற்போல்...
—அப்படி ஒரு உணர்வு அவளுக்கும் ஏற்பட்டிருக்குமோ என்னவோ...
அவனுடைய கரத்தைப்பற்றிய அவளுடைய மலர்க்கரம் சில வினாடிகள் வரையில் அதை விட்டுப்பிரிய மறுத்தது...
விமலின் மனம் ''கவிதா!'' என்றது...
ஏதோ ஒரு ஒற்றுமை...என்கவிதாவுக்கும் இந்த ஜெர்மானிய நங்கை ஹெல்லாவுக்கும்...அது என்ன..?
அந்தக்கண்கள்..?அந்த மூக்கு...?அந்தவாய்..?அந்தச்சிரிப்பு...
இதில் ஏதோ ஒன்று அல்லது எல்லாமேதானா?
அவன் விழிகள் அவளை ஆராய்ந்தன.
பொன்நிறக்கூந்தலை அளவோடு வெட்டி முதுகில் புரளவிட்டிருந்தாள்...
உதட்டுச்சாயம் பூசாமலேயே செக்கச்சிவந்த இதழ்கள்...கருவிழிகள் இல்லையென்றாலும் மங்கலான அந்த நீல விழிகளிலும் ஒரு தனிக்கவர்ச்சி இருந்தது...தூசிகூடப்படாமல் சுத்தமாகத் துடைத்து வைக்கப்பட்ட பளிங்குச்சிலைமாதிரி...இளரோஜவண்ணத்து மேனி...
'இவளைப்போன்ற அழகியை எப்போதுமே நான் கண்டதில்லை! என்று விமல் தனக்குள் ஒப்புக்கொண்டான்..

(தொடரும்)

www.tamilarangam.net

4 ம் பக்கத் தொடர்ச்சி.

அ ஆ இ இ உ உ
க க க கா கி கு
கே கை ங் ங் ங் ச
ச ச சி சொ ஞா ண ணே
த் த் த
த தி தி தி தி தை
த் த் த த த ப் ப் ப ப
ப பா பா பா பு பே ம் ம் ம் ம் ம் ம்
ம் ம் ம் மா மி மெ மே ய யா யா ர் ர் ர் ர்
ர் ர் ர் ர ர ரு ல் ல் ல் ல ல ல ல லா ள
லா வி வி வூ வ ழ் ள் ள ன் ன் ன் ன்
றா ல்.

## போட்டிகளுக்கான பொது விதிகள்:

உறுப்பெழுத்துப்போட்டி,சித்திரம்வரைதல்போட்டிகளில்
10 வயதுக்கு உட்பட்டவர்கள்மட்டுமே கலந்து கொள்ளலாம்.
சொற்களைக்கண்டுபிடிக்கும் போட்டியில் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் பங்குபெறலாம்.
போட்டிகளில் பங்குபெறுவோர் தங்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி என்பனவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.
இப்போட்டிகளுக்கானமுடிவு திகதி நவம்பர் 15 ம் திகதியாகும்.

நேரடிப்போட்டிகளில் கலந்து கொள்ளவிரும்புகிறவர்கள் ஒக்டோபர் 31 ம் திகதிக்கு முன்பு பூவரசு முகவரிக்கு எழுதி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.நேரடிப்போட்டிகள் 1993 தை மாதம் நடைபெறும்.

–ஷோபா அக்கா.

www.tamilarangam.net

# இலங்கை மாணவர் நம்பிக்கை நிதியம்.

*முருகபூபதி (அவுஸ்திரேலியா)*

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்!''

–என்றார் மகாகவி பாரதி.

ஏழைகளுக்கு அறிவொளி வழங்குவதன் அவசியத்தை உணர்த்திய மகாகவியின் எண்ணத்தை பிரதிபலிக்கும்விதமாக அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களினால் கடந்த 3 வருடங்களுக்கும் மேலாக ஒரு புலமைப்பரிசில் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

உயர் கல்விக்கு தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழ்மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி அறிவோம்.அதன் பெறுபேறாக தேசிய இனப்பிரச்சினை இலங்கையில் கூர்மையடைந்து தேசிய விடுதலைப் போராட்டமாக பரிணாமம் பெற்றதையும் அறிவோம்.

இப்போராட்டத்தின் திசைகளில் மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும் அழிவுகள் முற்றுப்பெறவில்லை.

தொடரும் யுத்த அவலத்தில் பெற்றோரை பலிகொடுத்து அனாதைகளாகியுள்ள எமது தமிழ்மாணவர் பரம்பரைக்கு கைகொடுத்து உதவுவதற்காக அவுஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்டதே ''இலங்கை மாணவர் நம்பிக்கை நிதியம்''

இத்திட்டத்தின் மூலம் ஈழத்தில் தமிழ்மாகாணங்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயனடைகின்றனர்.

பயனடைந்த சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவாகியுள்ளனர்.

பெற்றோரை இழந்து அனாதரவாகியுள்ள ஏழை மாணவர்களுக்கே இத்திட்டத்தின்மூலம் முன்னுரிமை வழங்கப்பட்டு நிதியுதவி அனுப்பப்படுகிறது.

www.tamilarangam.net

இம்மாணவர்களுக்கு நிதி உதவி அனுப்பும் அன்பர்கள்(ஞானப் பெற்றோர்கள்)
அவுஸ்திரேலியா,கனடா,டென்மார்க்,ஜெர்மனி,சுவிட்சர்லாந்து,
நோர்வே,சிங்கப்பூர்,சூடான் முதலான நாடுகளில் தெரிவாகியுள்ளனர்.
இந்த அன்பர்கள் தொடர்ந்து உதவுகின்றனர்.
மேலும் பல பாதிப்புற்ற மாணவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது.
உதவ விரும்பும் அன்பர்கள் மேலதிக விபரங்களுக்கு
தொடர்புகொள்ளவும்:

**CEYLON STUDENTS TRUST FUND**
**P.O.BOX: 317**
**BRUNSWICK**
**VICTORIA 3056**

**AUSTRALIA.**

*இம்மாதம் வெளியாகிறது!*

உங்கள் அபிமான நாவலாசிரியர்

# இந்துமகேஷ்

எழுதிய

# மேனியைக் கொல்வாய்

*(நெடுங்கதை)*

தனி நூல்வடிவில்
மலிவுப்பதிப்பாக
வெளிவருகிறது

இது ஒரு
பூவரசு
வாசகர்வட்ட வெளியீ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்னை உன் நாமம்
அனுதினம் எண்ணியே-ஆத்துமங்கள் உருகும்!
தவம்-
பண்ணியும் தீராத பாவங்கள் கறையும்!
உன் அருட் பார்வையிலே

விண்ணுக்கு ஏகிய
உன்திருக் காட்சியை-எங்களுக்குள்ளே உணர்ந்தோம்!
எங்கள்-
மண்ணுக்கு ஓர்வழி காட்டெனவே உந்தன்
பாதத்திலே விழுந்தோம்!

இந்துமகேஷ்.

மேற்குஜெர்மனி கேவலார் மரியன்னை
திருப்பாதங்களுக்கு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண்டுதோறும் பிறேமன் நகரில்
செல்வன் ப.அசோகன் அவர்களால் ஒழுங்கு
செய்யப்படும்

# கிருஷ்ண ஜெயந்திவிழா

21.08.92 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.
பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்ட
இவ்விழாவில் பூஜை,கூட்டுப்பிரார்த்தனை
என்பன நடைபெற்றன.